பரிமாணம் Parimanam
கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்





இதழ்: 14 | பிலவ வருடம் புரட்டாதி 13 [30.09.2022 வெள்ளிக்கிழமை] | பக்கங்கள்: 20 | விலை: 70/=

# வடக்கு கிழக்கில் போதைப்பொருள் திணிப்பு;
# நயவஞ்சக இன அழிப்பு

**யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை** 03



காலத்தால் அழியாத அடையாளம்






பாடலாசிரியர் ஆனது
எப்படி?






# ஐ.நாவில் தமிழருக்கு ஏமாற்றம்

குணா

## சர்வதேசத்தை இனியும் நம்பி என்ன பயன்? மாற்று வழிகளை பாருங்கள்

ஐ நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் தொடங்கினால் இலங்கை அரசியலில் இரட்டிப்பு பதட்டம் ஏற்படுவது வழமை.

உள்ளூர்விசாரணைகளில் நம்பிக்கை இல்லை; சர்வதேச நீதியே வேண்டுமென்று தமிழ் கட்சிகள் அழுத்தமான கோரிக்கைகளை முன் வைப்பதும், அதற்கு பலம் சேர்க்கின்ற வகையிலே ஆர்ப்பாட்டங்கள், உண்ணா விரதங்கள் முன்னெடுக்கப்படுவதும் புதிய விடயங்களாக பார்க்க முடியவில்லை.

இதற்கு எதிராக, இலங்கை அரசாங்கம் களமிறங்கி செயல்படுவதும், உலக நாடுகளிடம் ஆதரவு கோருவதும் காலம் காலமாக நடந்தே வருகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51வது கூட்டத்தொ டர் கடந்த 12 ஆம் தேதி ஆரம்பமாகியது. எதிர்வரும் ஏழாம் தேதி கூட்டத்தொடர் முடிவடைகிறது.

இலங்கை தொடர்பாக, ஐநா மனித உரிமை பேரவையின் முன்னாள் ஆணையாளர் நாயகம் திருமதி பஜ்லெட் அம்மையார் இலங்கை தொடர்பாக வெளியிட்ட 17 பக்க அறிக்கை முதலில் எடுக்கப்பட்டது. ஓகஸ்ட் மாதத்தில் பஜ்லெட் ஓய்வு பெற்றுச் சென்று விட்டார். அவருடைய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு முதலாம் நாளன்று இலங்கை தொடர்பான விடயங்களை சுட்டிக்காட்டினார்.

உண்மை எங்கும் கசக்கும். அதுதான் உலக யதார்த்தம். பதில் ஆணையாளர் நாயகம்,இலங்கை தொடர்பாக கூறிய கருத்துக்களுக்கு வழமை போன்று இலங்கை அரசு கண்டனத்தை தெரிவித்தது.

மனித உரிமை பேரவை தனது அதிகாரத்துக்கு அப்பால் செயல்படுவதாக இலங்கை பகிரங்கமாக குற்றம் சாட்டி இருக்கிறது. உலக நடப்புக்களையும் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளாமல் இலங்கை தொடர்ச்சியாக மறுப்பதிலும் குற்றச் சாட்டு தெரிவிப்பதிலுமே குறியாக இருக்கின்றது.

இதே போல, தமிழர் தரப்பை பார்க்கின்ற போதும், இலங்கையை எப்படியோ குற்றவாளி கூண்டில் நிறுத்த வேண்டும் என்ற குறியில் ஆவேசமாக இருக்கின்றது. கடந்த 12 ஆண்டுகளாக இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த இரு தரப்பின் கயிறு இழுப்புகளும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஐநா மனித உரிமை பேரவையில் கடந்த ஆண்டுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கொண்டுதான் இருக்கின்றன. இலங்கை மீது சர்வதேச அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன. என்றாலும் இலங்கையின் அந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாக இல்லை.

பொறுப்பு கூறல் விடயத்தில் இலங்கை அரசாங்கம் இலங்கை மீதான தீர்மானம் ஒன்றுக்கு அனுசரணையும் வழங்கி இருந்தது. ஆனாலும் எதுவுமே நடந்ததாக இல்லை.

51வது கூட்டத்தொடர் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஏழாம் தேதி முடிவடைகின்றது. இம்முறையும் இலங்கை மீது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படத்தான் போகின்றது.

இலங்கை மீது இரண்டு புதிய பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. முதலாவது முன் வைக்கப்பட்ட பிரேரணை பின்பு திருத்தங்களோடு முன்வைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, வட மெசிடோனியா, மாலாவி, மொன்ரனேக்கா உட்பட பல நாடுகள் இதற்கு இணை அனுசரணை வழங்கியிருக்கின்றன.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்பு கூறல்,மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகிய தலைப்புகளில் புதிய பிரேரணையை வரையப்பட்டு இருக்கிறது. இந்த 12 ஆண்டுகளிலே இலங்கை இந்த விடயங்களில் தன்னை திருத்திக் கொண்டதாக இல்லை.

இலங்கை மீது முன்வைக்கப்பட்டிருக்கின்ற இந்த இரண்டாவது பிரேரணை தான், பெரும் சர்ச்சையை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கிறது. ஐநா மனித உரிமைகள் பேரவையிலே முன்வைக்கப்பட்டிருக்கின்ற இந்த இரண்டாவது பிரேரணை வலுவானதாக இல்லை என்று தமிழர் தரப்பு குற்றம் சாட்டுகின்றது.

இவ்வளவு காலமும் தமிழர்களை ஏமாற்றி வருகின்ற இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது தமிழ் கட்சிகளின் ஏகோபித்த முடிவாக இருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நாயகம் பஜ்லெட்டும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை கடந்த ஆண்டு வலியுறுத்தி இருந்தார்.

என்றாலும், இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இரண்டாவது பிரேரணையில் இது பற்றி எதுவும் கூறப்படவில்லை.

ஆகவே, இது இலங்கையை காப்பாற்றுவதற்கான பிரேரணை என்று தமிழ் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படும் என்பதில் மாற்று கருத்து இல்லை. கூடுதலான வாக்குகள் இதற்கு கிடைக்கும் என்றும் எதிர்பார்ப்பு இருக்கிறது.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படுவதை தடுப்பதற்காக இலங்கை கடந்த ஆண்டுகளைப் போலவே ஆதரவு திரட்டும் முயற்சியில் இறங்கி இருக்கின்றது. இதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளோடு இலங்கை தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை வெற்றி பெறுமா? தோல்வி அடையுமா? என்பது அல்ல இங்கே உள்ள பேசு பொருள். 47 நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஐ. நா மனித உரிமை பேரவையால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துமா என்பது தான் இங்கே உள்ள பிரச்சினை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலே முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்மானம், இலங்கை மீது ஐ.நா காட்டுகின்ற தளர்வு போக்கு ஆகிய விடயங்கள் தமிழ் கட்சிகளை அதிருப்தி அடையச் செய்திருக்கின்றன என்று தான் கூற வேண்டும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்...

பரிமானம் கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம் Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
வெளியீடு: கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94 76 2933026 | +94 77 3457915

## முடியுமா? முடியாதா?

இன்றைய நெருக்கடி நிலை தமிழருக்கு புதிதானதல்ல. அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடந்த ஈவிரக்கமற்ற கொடூரமான பொருளாதார தடைகளால் இந்த மக்கள் அனுபவித்த துன்பங்கள் சொல்லி மாளாது.

30 ஆண்டு கால பொருளாதார தடை. இந்த மக்களை எப்படி வாட்டி இருக்கும்...? இதன் யதார்த்த நிலையை புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் இப்பொழுது இலங்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெனடோல் தொடக்கம் பெண்களுக்கான ஆரோக்கிய துவாய்கள் வரை, சகலதையுமே தடுத்தார்கள். வாழுங்கள் அல்லது செத்து மடியுங்கள் என்ற அகந்தை தொணியில் தான், கொடூரமான பொருளாதார தடை விதிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இந்த பொருளாதாரத் தடைக்கு தென்பகுதி சிங்கள மக்களும் முழுமையான ஆதரவாகவே இருந்தார்கள். இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியாலும் பசியாலும் போஷாக்கின்மையாலும் வாடிய நிலையிலும் கருணை காட்டப்படவே இல்லை.

தடைகளை, சவால்களாக எதிர்கொண்ட மக்கள் பீனீஸ்களாக மீண்டெழுந்தனர். மாற்று வழிகள் மூலம் முதுகெலும்புள்ள சமூகமாக புத்தெழுச்சி பெற்றனர் என்பதை வரலாற்று பாடமாக ஞாபகமூட்ட வேண்டியிருக்கிறது.

இப்பொழுது முழு நாடும் எதிர்கொள்கின்ற பிரச்சனை, அப்போது வடக்கு, கிழக்கு மீதான பொருளாதாரத் தடைக்கு நிகராகவே இருக்கிறது.

இல்லை... இல்லை.... இல்லையென்பதை தவிர நாட்டில் எதுவுமே இல்லை. தோல்வி அடைந்த நாடு என்ற உலக பட்டியலிலும் இலங்கை இடம் பிடித்து விட்டது.

பொருளாதார நெருக்கடி கட்டு மீறிய நிலையில் கொள்வனவு சக்தியை இழந்திருக்கின்ற மக்கள், பாரிய வரி விதிப்புக்களால், செய்வதறியாது விரத்தியின் விளிம்பிக்கு சென்று விட்டனர். ஆட்சியில் இருந்த மடையர் கூட்டத்தால் மக்களின் வாழ்வியலும் வாழ்க்கை முறையும் இப்போதும் முழுமையாகவே மாறிவிட்டன.

இந்த மோசமான நிலையிலும், அரசாங்கம் தனது இருப்பை காப்பாற்றும் ஆணவப் போக்கை கைவிட்டதாக இல்லை. கொழும்பு மாநகரம் முற்றாக அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

சிறு சிறு வலயங்கள் உருவாக்கப்பட்டது போல அரசாங்கம் காட்டிக்கொண்டாலும், ஒட்டு மொத்தத்தில் பார்க்கின்ற பொழுது கொழும்பு மாநகரின் முக்கிய பிரதேசங்களுக்குள் போக முடியாத நிலை தான் இருக்கின்றது. இரவோடு இரவாக இந்த உயிர் பாதுகாப்பு வலயம் பிரகடனம் செய்யப்பட்டதன் நோக்கம் என்ன? இது இப்போதும் மர்மமாகவே இருக்கின்றது.

ஏன் இந்த அவசர பிரகடனம்....? என்று கேட்டால் அரசிடம் உரிய பதில் இல்லை. நாட்டிலிருந்து ஜப்பானுக்கு புறப்படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்புதான் இந்த பிரகடனம் வெளியாகி இருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிவும் அறிவிப்பும் உலகம் முழுவதும் பெரும் எதிர்ப்பலையை உருவாக்கியது.

மக்களின் அமைதிப் போராட்டங்களை தடுக்கும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத போக்கு என ஜெனீவாவில் உள்ள மனித உரிமை பேரவை கண்டனம் தெரிவித்தது. நேரம் காலம் தெரியாமல் மாட்டிக்கொண்ட இந்த அரசாங்கம், சர்வதேசத்தில் இருந்து எழுந்த எதிர்ப்புக் குரல்களால் திகைத்துப் போய் நின்றது.

உண்மையில், கொழும்பு மாநகரிலும் சுற்றுப்புறங்களிலும் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதும் அச்சுறுத்துவதும்தான் இந்தப் பிரகடனத்தின் மறைமுக இலக்காக இருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு, மக்களின் தன்னெழுச்சி போராட்டம் ஒன்று வெடிப்பதற்கு எதிர்வு கூறலாகவே இருக்கிறது.

நாடு மோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில், மக்கள் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வெடிக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் அச்சமும் அரசாங்கத்திடம் இருக்கிறது. நலிந்து உடைந்து போய் கிடக்கும் மக்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குவது தான் இந்த அரசின் இலக்காக இருக்கிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்...

# வடக்கு கிழக்கில் போதைப்பொருள் திணிப்பு; நயவஞ்சக இன அழிப்பு

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை




இனம், மொழி, உரிமை என்று திரண்ட இளைஞர் கூட்டத்தை நயவஞ்சகமாக அழித்தது மட்டுமல்லாது. இனிவரும் எந்தக் காலப் பகுதியிலும் இவ்வாறு இன்னொரு இளைஞர் படை திரளவோ உருவாக்கப்படவோ கூடாது என்ற தந்திரச் சிந்தனையின் வெளிப்பாடே போதைப்பொருள் பாவனை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தின் செயலாளர் றாபின் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, சமகால அரசியல் தந்திர காய்நகர்த்தல்களை உன்னிப் பாக உற்றுநோக்கினால் சில விடயங்கள் தெரியவரும். வடக்கையும் கிழக்கையும் நில அமைப்புத் தொடு கையிலிருந்து பிளவுபடுத்தி, இரு வேறு தேசங்களாக மாற்றியமைத் தல், பாரம்பரிய மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அழித்தலும் அவ்விடங்களை பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத் தலும், நினை வேந்தல்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் செயற்பாடு களைத் தடுத்தல் இப்படியான நிகழ்ச்சி நிரலின் அடுத்த கட்டமேதான் போதைப்பொருள் பாவனையும் திணிப்பும்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்...

# சகல தொடர்புகளையும் துண்டித்த பசில் ராஜபக்ஷ?



அமெரிக்கா சென்ற முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இலங் கையுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துள் ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

அனைத்து விதமாக இலங்கை தொடர்பான செயற்பாடுகளையும் விட்டு விலகியுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

அவர் தனது தொலைபேசி இலக் கத்தை மாற்றி அமெரிக்காவில் தனியாக வசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பசிலுடன் நெருக்கமாக பணியாற் றுபவர்கள் கூட அவரைத் தொடர்பு கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ச பதவியை விட்டு வெளியேறி புதிய ஜனாதி பதியை நியமித்ததன் மூலம் ராஜபக்ச குடும்பத்திலும், பசில் ராஜபக்சவின் கட்சியாக இருந்த பொதுஜன பெரமுனவிலும் சில நெருக்கடிகள் உருவாகியது.

பொதுஜன பெரமுனவின் உறுப் பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் பெற்றுக் கொடுப்பதற்காக பசில் ராஜபக்ச கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்...

# தேசிய பேரவை முதலாவது கூட்டம்: 2 உப குழுக்களை அமைக்க தீர்மானம்





தேசிய பேரவையில் முதலாவது கூட்டத்தில் இரு உப குழுக்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கை களை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பது மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் மத்திய கால நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குவது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது என்பனவே இந்த உப குழுக்கள் அமைக்கப்படுவதற்கான நோக்கங்களாகும்.

சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்த்தன தலைமையில் இன்று (29) பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற "தேசிய பேரவையின்" முதலாவது கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச்சர் டிரான் அலஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், சிசிர ஜயகொடி, நாமல் ராஜபக்ஷ, ஜோன்டன் பெர்னாந்து, சாகர காரியவசம்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்...

# இலங்கையின் நெருக்கடி தொடர்பான கலந்துரையாடலுக்கு காலவரையறை போட முடியாது

## IMF பிரதானி

கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடலுக்கு காலம் எடுக்கும் என்பதால், கால வரையறை கணிப்பது கடினம் எனவும், சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவாக முன்சென்றால் இலங்கை நெருக்கடியில் இருந்து விரைவாக மீளும் என சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதானி *Peter Breauer* தெரிவித் துள்ளார்.

# மாவீரர்களை நினைவேந்த முடியும்; தடுக்க முற்படுவது அடிப்படை மனித உரிமை மீறல்

## தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வு



நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். வடக்கு- கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் அமைதியாகவே நடத்து கின்றனர். அடிப்படை அரசியல் அறிவு அற்றவர்களே இதற்கு எதிராகக் கண்டனங்களை வெளியிடுகின்றனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர் களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழினத்தால் "தியாக தீபம்" என்று போற்றப்படும் திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்கவேண்டுமென்று முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸா நாயக்க கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

"இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு போரிலோ அல்லது வேறு எந்தச்சந்தர்ப்பத்திலோ உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அல்லது அவர்களின் இனத்தவர்கள் அமைதியாக நினைவேந்த முடியும். இதற்கு எதிராக எவரும் கருத்துக்களை வெளியிட முடியாது.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமை யைப் பறித்துவிட்டு நாட்டில் எப்படி நல் லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் ? மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தரப்பினரும் அதன் நேர்வழி, மறைவழி பங்காளிகளும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களின் மனதைப்புண்படுத்தியே வந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன்வரவில்லை. இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும்" என்றார்.

## முடியுமா? முடியாதா?... (ஆசிரியர்த் தலைப்பு...

அதேபோல, பாதுகாப்பு வலயத்தின் பிரகடனம் அழுத்தங்களை ஏற்படுத்தும் என்று அரசு கொஞ்சம் கூட எதிர் பார்க்கவில்லை. இதனால், தட்டுத் தடுமாறிய நிலையில், ஏன் பிரகடனம் செய்தார்கள் என்பதற்கு விளக்கம் அளித்தார்கள். ஜனாதிபதி இல்லாத நிலையில் கொழும்பில் அவசர அவசரமாக செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

பதில் பாதுகாப்பு அமைச்சரும், பாதுகாப்பு செயலாளரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர். நாம் அமைதி வழி போராட்டங்களுக்கு எந்த வகையிலும் தடை விதிக்கவில்லை. தாராளமாக ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்தலாம். ஆனால் 6 மணித்தியாலங்களுக்கு முன்னர் போலீசாரிடம் அனுமதி பெற வேண்டும் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்தின விளக்கம் அளித்தார். இந்த விளக்கங்கள் அழுத்தங்களால் வெளிப்பட்டவையாகவே பார்க்க முடிந்தது.

பசி பட்டினியால் வாடுகின்ற மக்கள் தன்னெழுச்சி போராட்டங்கள் நடத்துகின்ற பொழுதும், தடுத்து நிறுத்த முடியும் என்று அரசு நினைத்தால், அது அறியாமையின் வெளிப்பாடாகவே இருக்கும். மக்களின் உணர்வு பூர்வமான தன் எழுச்சி போராட்டம் சுனாமிக்கு ஒப்பானது. அத்தகைய போராட்டங்களை தடுத்து நிறுத்த முற்படுவது தற்கொலைக்கு சமமாக முடியும் என்பதை ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆயுதமும் அடக்கு முறையும் நீடித்து நிலைக்காது என்பதற்கு கோட்டா பய ராஜபக்சவின் தப்பி ஓட்டம் நல்லதொரு படிப்பினையாகும்.

ஜனாதிபதி ரணில் எதனையும் செய்யக்கூடியவர் என்ற எதிர்பார்ப்பு வெற்றி அளிக்கவில்லை. முடிந்தவரை அவரும் அர்ப்பணிப்போடு முயல்கிறார். முடியாமலேயே இருக்கிறது. ராஜபக்ச குடும்பத்தினர் ஏற்படுத்திய பாதிப்பு ஈடு செய்ய முடியாததாகவே இருக்கிறது. கடன் வழங்க முன் வருகின்ற நாடுகள் கூட அச்சம் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையோடு ஆட்சி பொறுப்பை எடுத்துக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், இன்னும் கை கூடாமல் இருக்கிறது. ஏதோ ஒரு வழியில் சமாளிப்பதற்காகவே வரி விதிப்புகளை கட்டாயமாக்கி இருக்கிறார். இந்த வரி விதிப்புக்களால் மக்கள் மிகவும் நொந்து போய் அழுத்தத்தின் விளிம்புக்கே சென்று இருக்கிறார்கள். இது எந்த வடிவில் போராட்டமாக வெடிக்கும் என்று கூற முடியாமல் உள்ளது.

வசந்த முதலிக்கே போன்ற மாணவ தலைவர்களை ஜனாதிபதியின் உத்தரவின் பெயரிலேயே கைது செய்து இருக்கிறார்கள். இதன் மூலம் போராட்டத்தை ஒடுக்கலாம் அல்லது நிறுத்தலாம் என்பது அவர்களுடைய நினைப்பு. அப்படி நினைத்துக் கொண்டால் அது அறியாமை என்று தான் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்கள் தெரியாத ஒரு கத்துக் குட்டி அரசியல்வாதியல்ல. இதை உலகமும் நன்கு அறியும். ஆனால் இவர் மொட்டு கட்சியினதும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினதும் அழுத்தங்களின் நிர்ப்பந்த அரசியலுக்குள் ரணில் சிக்கி இருப்பதனால், சுதந்திரமான நிறைவேற்று அதிகாரியாக அவரால் செயல்பட முடியாமல் திண்டாடுகிறார் என்பது தான் கவலைக்குரிய அரசியலாக இருக்கின்றது.



# நெருக்கடியை சாதகமாக்கி புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்

## நிதி ஒருங்கிணைப்புக்கு வரிச் சீர்திருத்தங்கள் அவசியம்



ஏ. எல். எம். அஸ்லம் PhD
பொருளியல் நிபுணர்

வின்ஸ்டன் சர்ச்சிலின் புகழ்பெற்ற வாசகம், "ஒரு நல்ல நெருக்கடியை வீண டிக்க வேண்டாம்" என்பது தற்போதைய சூழலில் இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்க முடியாது.

சுதந்திரத்தின் பின்னர் அதன் மோசமான நெருக்கடிகளில் ஒன்றால் தாக்கப்பட்ட ஒரு பொருளாதாரம் நாட்டிற்கு மிகவும் தேவையான சீர்திருத்தங்கள் மீது தனித்து வமான வாய்ப்பை வழங்குகிறது. இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற பல நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடி களைச் சந்தித்த பின்னர் பரந்த அளவிலான பொருளாதார சீர்திருத்தங்களைச் செயல் படுத்தி, மிகவும் வலுவாகவும் உத்வேக மாகவும் மீண்டு வந்தன. இவற்றைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கம் நிலவும் பொருளாதார நெருக்கடியை சாதக மாகப்பயன்படுத்தி, பிற்போக்கானமானியங் களை நிவர்த்தி செய்வதிலிருந்து அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் வரை இதுவரை முயற்சி செய்ய முடியாத விஷயங்களைச் செய்ய வேண்டும்.

ஒரு பொருளாதாரம் எவ்வாறு நிர்வகிக்கப் படக்கூடாது என்பதற்கான பாடப் புத்தகமாக நாடுகளில் பரவலாக சுட்டிக் காட்டப்படுவதே இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தீவிரத் தன்மைக்கு சான்றாகும்.

### பொருளாதாரம் எப்படி நிர்வகிக்க கூடாது என்பதற்கு இலங்கை நல்லதொரு பாட புத்தகம்

கடந்த சில மாதங்களில் தீவிர எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு, பண வீக்கம், அதிகரித்த உணவுப் பணவீக்கம், மருந்து தட்டுப்பாடு மற்றும் அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக நீண்ட மின்வெட்டுக்கு வழிவகுத்தது. இந்த நெருக்கடியில் இருந்து மீள, இலங்கை இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

பல தசாப்தங்களாக நிதிப்பற்றாக்குறை, நடப்புக் கணக்குப் பற்றாக்குறை, வீங்கிய பொதுத்துறை, வரி வருவாய் குறைதல் மற்றும் மானிய விலை ஆகியவை இந்த நிலைமைக்கு வழிவகுத்தன. தற்போது, நாடு சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பை எதிர்நோக்குகிறது.

அதற்காக அதன் கடனை மறுகட்டமைக்க வேண்டும். கடன் மறுசீரமைப்பு சிக்கலானதாக இருக்கலாம், குறிப்பாக சீனாவுடன், மறுசீரமைப்பு அணுகுமுறைகளுக்கு பதிலாக கடன்களை மறுநிதியளிப்பு செய்ய விரும்புகிறது. சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களில் ஒருவர் இலங்கை அரசாங்கத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது நாட்டுக்கு ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறது.

பொருளாதாரம் விளிம்பில் தத்தளித்து வரும் நிலையில், இந்த நெருக்கடிக்கு வழிவகுக்க நீண்ட காலதாமதமான விரிவான பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

இது இலங்கையின் பொருளாதார மந்த நிலைக்கு வெள்ளி வரிசையாக இருக்கக் கூடும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் நிர்வாகத்தின் பல கொள்கைகள் பொருளாதார நெருக்கடியை மோசமாக்க வழிவகுத்தது. இலங்கை ஏற்கனவே குறைந்த வரி வருவாயை பெற்று வந்த நிலையில், 2019 இல் விதிக்கப்பட்ட வரிக் குறைப்புக்கள், பெரிய நிதிப் பற்றாக்குறைக்கு மேலும் வழிவகுத்தது, இதன் விளைவாக சர்வதேச தரமதிப்பீட்டு நிறுவனங்கள் இலங்கையை தரமிறக்கி, சர்வதேச மூலதனச் சந்தைகளில் இருந்து நாட்டை மூடிவிட்டன.

COVID-19 தொற்றுநோய், சுற்றுலாப் பயணிகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களால் வீட்டிற்கு அனுப்பப் படும் பணத்தின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலைமையை மேலும் மோசமாக்கியது. இரசாயன உரத்தடை என்பது மற்றொரு தவறு என முன்னாள் ஜனாதிபதியே ஒப்புக்கொண்டார். இதனால், விவசாய உற்பத்தி கணிசமாகக் குறைந்தது. வெளிநாட்டு இருப்புக்களை பயன்படுத்தி அமெரிக்க டொலருக்கு நாணய மாற்று வீதத்தை 203 இலங்கை ரூபாவாக நிர்ணயித்தமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஈடுபாட்டை ஒத்தி வைத்ததன் மூலம் பொருளாதார நெருக்கடி கட்டுப்பாட்டை மீறியது இலங்கைப் பொருளாதாரத்தின் கட்டமைப்புப் பிரச்சினைகளில் பெரும் பங்கு உள்ளது.

26 ஆண்டுகால உள்நாட்டுப் போர், அன்னிய நேரடி முதலீட்டுக்கு எதிரான கலாச்சார முன்கணிப்புகள், தனியார் மயமாக்கல் குறித்த பொதுமக்களின் சந்தேகம், ஜனரஞ்சகக் கொள்கைகள் மற்றும் குறைந்த வரிகள் போன்ற மேக்ரோ ஆபத்து காரணிகள் அனைத்தும் நாடு தற்போது இருக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன என்று குறிப்பிடுவதில் எந்தத் தவறும் இல்லை. 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது, அதன் பொருளாதாரம் ஆசியாவிலேயே சிறந்த ஒன்றாக இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு விஷயங்கள் பெருகிய முறையில் கீழ்நோக்கிச் சென்றன.

பல தசாப்தங்களாக இலங்கைப் பொருளாதாரத்தில் ஜனரஞ்சகப் பொருளாதாரக் கொள்கைகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. மானிய விலையில் அரிசி, விலையில்லா ரொட்டி, இலவச உரம், குறைந்த வரி உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளுடன் பல அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றன. இது அரசாங்க வருவாயில் ஒரு அடுக்கடுக்கான விளைவைக் கொண்டிருக்கிறது, பல தசாப்தங்களாக நிதிப் பற்றாக் குறை, அரசாங்கக் கடன் அதிகரிப்பு மற்றும் பணத்தை அச்சிடுவதற்கு வழிவகுத்தது, இதன் விளைவாக, குறைந்த ஆனால் நிலையான பணவீக்க விகிதம் உள்ளது.

அரசியல் கட்சிகளும் தேர்தல் காலங்களில் அரசாங்க வேலைகளை உறுதியளிக்கின்றன, இதனால் பலருக்கு அரச துறை வேலைகள் கிடைக்கின்றன. அத்தகைய வேலைகள் இல்லாதபோதும் கூட, இலங்கையில், நாட்டின் மொத்த பணியாளர்களில் ஆறில் ஒருவர் மட்டுமே அரசால் பணியாற்றுகின்றனர்.

### ரூபாய் மதிப்பில் வருமானம்: டொலர் மதிப்பில் கடன் செலுத்தல் – இலங்கை சிந்திக்க வேண்டிய விடயம்

மொத்த அரச துறை பணியாளர்கள் 1.4 மில்லியன் ஊழியர்களாக உள்ளனர், இதன் விளைவாக 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வரி வருவாயில் 86 சதவீதம் அரச துறை ஊழியர்களின் சம்பளத்திற்குச் சென்றது. நிலைமையை மோசமாக்கும் வகையில் அரசாங்க வருவாயில் 71 சதவீதமானது இலங்கையின் இறையாண்மைக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்குச் செல்கிறது.

அரசுத் துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் வட்டிச் செலவுகள் மட்டும் பெரிய நிதிப் பற்றாக்குறையை விளைவிக்கிறது. இது அதிக கடன் வாங்குதல் மற்றும் அளவு தளர்வு மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இது சுகாதாரம், கல்வி மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களில் அரசாங்க முதலீட்டிற்கு மிகக் குறைவான இடமே உள்ளது.

தெற்காசியாவில் 1980 களில் தனது பொருளாதாரத்தைத் திறந்த முதல் நாடாக இலங்கை இருந்த போதிலும், தெற்காசியாவில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது மிக உயர்ந்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டிருந்தாலும், அதன் தாராளமயமாக்கல் முழுமையாக முடிக்கப் படவில்லை மற்றும் பல கொள்கைகள் பின் தசாப்தங்களில் தலைகீழாக மாற்றப்பட்டன.

2000 களின் நடுப்பகுதியில் இருந்து, அரசாங்கம் இறக்குமதி மாற்றீட்டில் கவனம் செலுத்தியது. மறுபும் இலங்கை பெரும்பாலும் குறைந்த வட்டி விகிதத்தில் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கியது, ஆனால், 2000 களின் நடுப் பகுதியில் இலங்கை தனது முதல் சர்வதேச இறையாண்மைப் பத்திரத்தை 2007 இல் வெளியிட்டது. மற்றும் உள்நாட்டுப் போருக்குப் பிந்திய காலத்தில் சீனாவிடம் அதிக வட்டி விகிதத்தில் கடன் வாங்கத் தொடங்கியது. பெரும்பாலான பணம், வர்த்தகம் அல்லாத தொழில்கள் மற்றும் கொழும்பு தாமரை கோபுரம் போன்ற திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டன .

### உற்பத்தியில் உலகளாவிய போக்குடன் இலங்கை செல்ல வேண்டும்

கடைசியாக, 1990களின் நடுப்பகுதியில் இருந்து, இலங்கையின் வரி வருவாய் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. 1990 இல், இந்த விகிதம் கிட்டத்தட்ட 20 சதவீதமாக இருந்தது. இது பல வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இருந்தது. வரி-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2019 இல் 12 சதவீதமாகக் குறைந்தது, மேலும் வரிக் குறைப்புகளுக்குப் பிறகு, இது 8 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளது. இது உலகின் மிகக் குறைந்த மட்டங்களில் ஒன்றாகும். விஷயங்களை மோசமாக்க, நேரடி வரிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்திற்கும் குறைவாக பங்களிக்கின்றன. மேலும் மக்கள் தொகையில் 1 சதவீதம் மட்டுமே வருமான வரி அடிப்படையின் கீழ் வருகிறது.

இலங்கை தனது கடன் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த நெருக்கடியிலிருந்து வலுவாக வெளிப்படுவதற்கும் நீண்ட கால நிலையான வளர்ச்சிக்காக பரந்த அளவிலான பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உள்ளூர் நாணயத்தில் நம்பிக்கையை வைத்திருக்க நிலையான பணவியல் கொள்கை முக்கியமானது. இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது. சுதந்திரமான மத்திய வங்கி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகவும் தெளிவாகக் காட்டுகிறது.

4ஆம் பக்க தொடர்ச்சி...

# எம் உணர்வை மாற்றானுக்கும் உணர்த்தும் போராட்ட வடிவமே இன்றைய தேவை

குருநாதன் பிரதீபன்
திருகோணமலை.

இலங்கை அரசியல் அமைப்பில் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டாலும் அவை 43 வருடத்தை கடந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை போல் புகழ்பெற்ற சட்டமூலமாக செயல் படவில்லை என்பதே நிதர்சனம்.

பயங்கரவாத தடை சட்டம் தமிழ் மக்கள் மீதும் அவர்களது உரிமை போராட்டத்தை ஒழிக்கும் நோக்கிலும் கண்மூடித்தனமாக பாவிக்கப்பட்டதே நிதர்சனம்.

ஆனால், தற்பொழுது இந்த பயங்கரவாத தடைச்சட்டம் தேவாலயங்களில் குண்டு வெடிப்புக்கு பின்னர், இஸ்லாமிய மக்களின் மீதும் காலிமுகத்திடல் போராட்டங்களின் பின்னாலுள்ள சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும் இப்பொழுது பயன் படுத்தப்பட்டு வருகிறது .

தற்பொழுது இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்கள் முன்னணியில் நிற்கின்றார்கள்.

தமிழர் மீது இச் சட்டம் பாவிக்கப்பட்டு எம் சந்ததி அனுபவித்த இன்னல்களை வார்த்தையால் வடிக்க முடியாத துயரம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த அமைச்சரவையில் ரவூப் ஹக்கீம் நிதி அமைச்சராக பதவி வகித்தவர்.

அப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல் தொடர்பான பிரச்சினையை பாராளுமன்றத்தில் எழுப்பிய பொழுது, ஹக்கீமும், அவரது கட்சி உறுப்பினர்களும் இதனை முழுமையாக எதிர்த்தனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் (முஸ்லீம் மக்களல்ல) தங்கள் தேவைக்கு ஏற்றவகையில் தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் வாதிகளையும் கழுவுகிற மீனில் நழுவுகிற மீன்கள் போல் தங்களது அரசியலுக்கு பாவிக்கின்றனர்.

அவர்களை போல் தன்மக்களுக்கான அரசியலை வழிநடத்தும் அளவுக்கு தமிழ் மக்களின் உரிமை அரசியல் தேவைகளை உணர்ந்து அரசியல் செய்ய இன்றைய தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இன்னும் பக்குவப்படவில்லை என்பதே வேதனையோடு கூடிய உண்மை. இதற்கு நல்ல உதாரணம் இவ்வருடம் மாசி மாதம் இலங்கை முழுவதும் தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணி மூலம் எடுத்த பயங்கரவாத சட்ட நீக்கும் கையெழுத்து வேட்டை... அன்று வைத்த கையெழுத்து வைத்த பேப்பரின் தலையெழுத்து இன்று மீண்டும் தேங்காய் உடைத்து பழைய தும்புதடிக்கு பட்டுக் குஞ்சம்.

ஹக்கீம் அவர்களும், சுமந்திரன் அவர்களும், சாணக்கியன் போன்றவர்களும் எதிர் வரும் பாராளுமன்ற தேர்தல்களிலும் தங்களின் கதிரைகளை தக்க வைப்பதின் ஒரு தொடர்ச்சி தான் பயங்கரவாத தடுப்புக்கு எதிராக உண்ணாவிரத, ஊர்தி போராட்டங்கள்.

முகநூலில் தலைவரின் படங்களை பிரசுரிப்பதின் மூலந்தான் தேசத்தின் பால் எங்களுக்குள்ள ஈர்ப்புத்தன்மையையும், உணர்ச்சியையும் தெரியப்படுத்த வேண்டிய அவசியம், போராட்ட காலத்தில் ஈடுபாடுடன் இருந்து குடும்பத்தில் பல இழப்புக்களை சந்தித்த ஈழத் தமிழர்களுக்கு இல்லை.

தற்பொழுது தங்கள் சுயநலத்திற்கு உணர்ச்சி அரசியலை விதைத்து புதிய தலைமுறை இளைஞர்களை தூண்டிவிட்டு இதுதான் அரசியல் என்று போலி விம்பத்தை காட்டி, அவர்களை முகநூல் போராளியாக்கி சிறைக்குள் தள்ளி ஆதாயம் தேடுவதும். அவர்களை விடுவிக்க பாடுபடுவது போல் பாசாங்கு செய்வது வாடிக்கையான வேதனை.

புகைப்படத்தை பகிர்ந்த இளைஞர்கள் சிறையில் இருப்பதும் அதை தமிழ் அரசியல் வாதிகள் வாக்காக்குவதும் தொடர்கதையான விடயம்... குப்பிகள் கழுத்தில் தொங்கியும் அரசியல் கைதிகளாக பிடிபட்டது பிடிபட்ட போராளிகளின் துரதிஸ்டம்.

சிங்கள பேரினவாத அரசிடம் பிடிபடாமல் இருப்பதற்காகவே கழுத்தில் சயனைட் குப்பிகள் தொங்கவிடப்பட்டது என்பது வரலாறு கற்றுத்தந்த பாடம்.

46 தமிழ் கைதிகளின் விடுதலையும் வேண்டுமே தவிர, அது மட்டும் தான் வேண்டும் என்ற தோற்றப்பாடு தான் ஆபத்தின் உச்சம்.

தப்பிச் செல்ல பல வழிகள் இருந்தும் தாம் எடுத்த கொள்கைக்காக தம் உயிரை மாய்த்த தியாகம் என்றும், எப்போதும் எம் பலத்தோடு கூடிய கௌரவம்.

குடும்பத்திலும் பல உயிர்களை போராட்டத்திற்காககாவுகொடுத்தநாங்கள், எங்களின் அரசியல் உரிமை நோக்கத்தை தாண்டி தற்போது அரசியல் கைதிகளின் விடுதலையில் மட்டுப்படுத்தப்படுவது கண்ணுக்கு தெரியாத சதிவலை.

“காந்தியம் வெல்லும் என்று கனவு கண்டு காந்தியிலும் ஒரு படி உயர்ந்த திலீபன்” அவர்களது வரலாற்று காலத்தில், அரசியல் காமடியர்களின் சித்து விளையாட்டில் ஒன்று இந்த அடையாள உண்ணாவிரதம்.

எம் அரசியல் உரிமைக்கு உங்களை அனுப்பினால் நீங்கள் ரணிலின் உரிமை, டலஸின் வருகை, காலிமுக களியாட்டம், நடுநிலைமை என்று திரிவது எவ்விதத்தில் நியாயம்.

இப்படியே செயற்பட்டால், வரும் காலங்களில் கடவுளால் கூட தமிழ் மக்களை காப்பாற்ற முடியாது. எம்மை உணர்சிப்படுத்துவதை விடுத்து எம் உணர்வை மாற்றானுக்கு உணர்த்தும் வடிவத்தை தேடவும்.

இது குறையல்ல, நியத்தை தேடுவதற்கான நிதர்சனம்.

2ஆம் பக்க தொடர்ச்சி...

## ஐ.நாவில் தமிழருக்கு...

இது தொடர்பில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஐநா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நாயகத்திற்கு அவசர அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள்.

### ஜெனீவாவுக்கு அதிருப்திக் கடிதம்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக இம்முறை நிறைவேற்றப்படவுள்ள பிரேரணையின் நகல் தொடர்பில் அதிருப்தி தெரிவித்து இலங்கை விடயத்தைக் கையாளும் பிரதான நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான மாவை. சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), சி. வி. விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் கூட்டணி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தர்த்தன் (புளொட்), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), ந. சிறீகாந்தா (தமிழ்த் தேசியக் கட்சி) ஆகியோரே ஒன்றிணைந்து ஒப்பமிட்டு இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்த் தரப்பினரின் கோரிக்கைகள் முக்கியமாக பிரேரணையில் உள்வாங்கப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஐ,நா. மனித உரிமைகள் பேரவையின் பிரதான அங்கத்துவ நாடுகளிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் என மேற்படி ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் குருசாமி சுரேந்திரன் ஜெனிவாவிலிருந்து கூறுகிறார்.

**அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:–**

“பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பிலிருந்து கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தங்களுக்கு ஏற்கனவே நாங்கள் அனுப்பி வைத்திருந்த போதிலும் வெளிவந்திருக்கும் மாதிரிப் பிரேரணையில் எம்மால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் பரிந்துரைத்ததுமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் குற்றவாளிகளைப் பாரப்படுத்த வேண்டும் என்ற விடயம் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

அழிவுகளுக்கான அனுபவத்தைக் கொண்டவர்கள் நாம். சர்வதேச சமூகத்தின் செயலற்ற நிலையினால் நாம் பாரிய விலை கொடுத்துள்ளோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

இந்தநிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் முகமாக ஐ,நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் பிரேரணையில் நமது கோரிக்கைகள் உள்ளடக்கப்படாமல் இருப்பதை அவதானிக்கின்றோம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கைகளை மாத்திரமல்லாமல் ஐ.நா. உயர் அதிகாரிகளின் பரிந்துரைகளையும் உதாசீனம் செய்து சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணையில், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குக் குற்றவாளிகளைப் பாரப்படுத்தும் எமது பிரதான கோரிக்கையை உள்ளடக்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம்” என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையை பார்க்கின்ற போது, இலங்கைக்கு பாரிய அழுத்தம் கொடுக்காத ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட போகின்றது என்பது தெளிவாகின்றது.

என்னதான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், இலங்கையில் உள்ள பிரச்சனைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஐக்கிய நாடுகள் சபையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதற்காக சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர் சர்வதேசத்திற்கு விடுத்துள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக உள்நாட்டு பரிந்துரைக்கு தீர்வை காண முயற்சி செய்யாத இந்த அரசாங்கம், உலகப் பொறிமுறை, உலகப் பொறிமுறை என்று கூறி உலகத்தை ஏமாற்றி வருவதாக தமிழ் கட்சிகள் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகின்றன.

எனவே, சர்வதேசத்தை முழுமையாக நம்பி இருக்கின்ற இந்த தமிழ் கட்சிகள் இனிமேலாவது மாற்று வழிகளை பற்றி சிந்திக்க வேண்டும். அதற்கான படிப்பினை இப்போது பிறந்து இருக்கிறது.



# அச்சுறுத்தும் இந்த அரசுக்கு முஸ்லிம்கள் ஆதரவில்லை

## முஸ்லிம் தலைமைகளின் ஏக முடிவு சமூக நலனை பாதிக்குமா?

நிப்ராஸ்

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் விடயத்தில், சிறுபான்மை கட்சிகளின் ஏகதலைமைகள் ஜனாதிபதிக்கு ஒத்துழைக்காதுள்ளமை தேசிய அரசியலை தடுமாறவத்துள்ளது.

இந்த ஏக தலைமைகளை உள்வாங்கி அமைக்கப்படும் அரசாங்கத்தால்தான், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியுமென்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு. இன்று, ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசுதான் அவசியம். எதிர்பார்த்துள்ள சர்வதேச உதவிகள் தடையின்றி கிடைப்பதற்கான வழிகளையும் இவ்வாறான ஒரு அரசால்தான் திறந்துவிட முடியும். இதற்காகவே ஜனாதிபதி இவ்வளவு முயற்சிக்கிறார். இந்த முயற்சிகளின் முக்கியத்துவத்தை விளங்கியுள்ள முஸ்லிம் சமூகத்தின் ஏக தலைமைகள் இந்த சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காகன இணக்கப்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக செயற்படுவது ஏன்?

இந்தக் கேள்விகள் இப்போது, கிழக்கின் மூலை, முடுக்குகளில் எதிரொலிக்கின்றன.

இந்த அரசினதோ, அல்லது ஜனாதிபதியினதோ ஆயுள் கெட்டியானதில்லை என்றா இக்கட்சிகள் கருதுகின்றன? அல்லது, இந்த அரசின் ஆயுளைக் குறுக்கிவிடும் களத்துக்காக இந்தக் கட்சிகள் காய்நகர்த்துவதாகவும் இந்த இழுத்தடிப்புக்களை கருதலாம். எவ்வாறாயினும், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் நல்லதொரு விளம்பரத்துக்காக இந்த ஏக தலைமைகள் தயாராகுவதாகவே கருதத் தோன்றுகிறது. ஏனெனில், இவ்வளவு காலமாக இந்தக் கட்சிகள் உரத்துக் குரல் கொடுத்த எந்த விடயங்களும் சாதிக்கப்படவில்லை.

இதனால், சமூக உணர்வு, உரிமை முழக்கம் என்பன இனி வரும் தேர்தலில் கை கெடுக்காதென்பதை உணர்ந்துள்ள இத்தலைமைகள் வாக்காளர்களின் கண்களுக்கு முன்னாலே தற்போதைய களத்தைக் கொண்டு வரவுள்ளன.

முஸ்லிம்களின் ஜென்ம விரோதிகளாக அடையாளங் காணப்பட்டுள்ள ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசையோ அல்லது ஜனாதிபதியையோ ஆதரிக்கும் நிலைப்பாட்டில், தாங்கள் இல்லையென்றே இத்தலைமைகள் கூறப் போகின்றன. இதற்கான அடையாளமாக, அண்மையில் நடந்த சவூதி அரேபியாவின் 92வது சுதந்திர தின நிகழ்வுகள் தென்படுகின்றன.

**இஸ்லாத்தையும் முஸ்லிம்களின் மத மற்றும் கலாசார நம்பிக்கைகளை மிகக் கீழ்த்தரமாக விமர்சித்த ஞானசார தேரரைப் பாதுகாத்த பெருமை ராஜபக்ஷக்களைச் சாரும்.**







கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் நடந்த இவ்வைபத்திற்கு வந்த ஸ்ரீங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்கள் ஞானசார தேரரைக் கண்டதும் அதிருப்தியடைந்து நிகழ்விலிருந்து வெளியேறி விட்டனர்.

இஸ்லாத்தையும் முஸ்லிம்களின் மத மற்றும் கலாசார நம்பிக்கைகளை மிகக் கீழ்த்தரமாக விமர்சித்த ஞானசார தேரரைப் பாதுகாத்த பெருமை ராஜபக்ஷக்களைச் சாரும். இவ்வாறான ஒருவரின் நிழலில் ஒதுங்கவும் முஸ்லிம்கள் தயாரில்லை. இந்நிலையில சவூதியின் வைபவத்தில் இவரால் எப்படி வரமுடியும். இங்குள்ள அதிகாரிகள் இவர் குறித்து சவூதி அரேபிய அதிகாரிகளுக்கு எடுத்துரைப்பதில்லையா? என்ற ஆத்திரம், விமர்சனங்கள் கிழக்கில் களத்தை கொதிக்க வைத்துள்ளது. இதுவும், இதுபோன்ற நிறைய நியாயங்களுமே, ரணிலின் அரசாங்கத்தில் இவர்களை இணைவதைத் தடுக்கின்றன.

எப்படியாவது, இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரும் இன்னுமொரு வியூகமும் இப்போது கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. தேசிய அரசுப் பேரவையை அமைத்து நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் முயல்வதாகக் காட்டப்பட்டிருக்கிறது. 35 பேரை அங்கத்துவமாக கொண்டுள்ள இச்சபை யில், சுமார் பத்துப்பேர் சிறுபான்மை பிரதிநிதிகள். இந்தச் சபையின் கோரமாக பத்துப்பேரே அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பெரும்பான்மை பிரதிநிதிகள் எவருமே வராத சந்தர்ப்பத்தில் சிறுபான்மையினரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களும் இங்கு ஏற்படலாம். எனினும், இதைவிடுத்து பழைய பாணியில் எல்லாவற்றையும் விமர்சிக்கும் மனநிலையில்தான் இப்போது இந்த முஸ்லிம் தலைமைகளும் செயற்படத் தொடங்கியுள்ளன. விமர்சன அரசியல் தமிழர் தரப்பை கொண்டுபோய் நிறுத்தியுள்ள தூரத்தை இந்த தலைமைகள் அவதானிப்பது அவசியம் என்றும் புத்திஜீவிகள் பலர் கூறுகின்றனர்.

எனவேதான், முஸ்லிம் தலைமைகள் இந்தச் சூழ்நிலைகளில் தடுமாறியும், தலைசுற்றியும் திரிகின்றன. ஒருவாறு, இந்த அரசாங்கம் எஞ்சியுள்ள காலத்தையும் கடத்துகின்ற சக்தியைப் பெற்றுவிட்டால், ஏக தலைமைகள் சில காலங்கள் தலைகுனிந்தே வாழ நேரிடும். நாளாந்தம் உண்பதே பெரிய சவாலாக இருக்கையில் எப்போதோ கிடைக்கப் போகின்ற உரிமைக்காக அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் சந்தர்ப்பத்துக்காக கிடைப்பவற்றை தூக்கி வீசிவிடும் மனநிலையில் எந்த வாக்காளர்களும் இல்லை.

ஜப்பான் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆசிய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களை சந்திக்கவுள்ளதுதான் பிரதானமாகிறது. இவ்வாறான சந்திப்புக்களின்போது, இலங்கையை கடந்தகால கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது என்பதில் ஜனாதிபதி தெளிவாக உள்ளார். இதற்காகவே தேசிய பேரவை, இதற்காகவே சர்வகட்சி அரசாங்கம் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் பார்வை.

இலங்கையில் இனவாதமில்லை, இனரீதியான பாகுபாடும் இல்லை என்பதைக் காட்டும் ஜனாதிபதியின் முயற்சிக்கு சிறுபான்மை சமூகங்களின் ஏக தலைமைகளது ஒத்துழைப்புக்கள் தேவைப்படுவது இதற்காகத்தான். பயங்கரவாத தடைச்சட்டத்தை பலப்படுத்தி, அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்து, அச்சுறுத்தும் இந்த அரசுக்கு எங்களது ஆதரவில்லை என்ற நிலைப்பாட்டைக் காட்டவே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. இந்தச் சந்தர்ப்பம், இந்த அணியிலுள்ள ஏக முஸ்லிம் தலைமைகளுக்கும் பொருந்தவே செய்கிறது.

# எங்கே செல்லும் இந்த நாடு...?



குணராசா

கடந்த 20 மாதங்களில் நாட்டை விட்டு 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தொழிலுக்காக நாட்டை விட்டு புலம்பெயர்ந்து இருக்கிறார்கள்.

கடந்த 20 மாதங்களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக குடிவரவு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், குடிவரவு பிரதிக் கட்டுப்பாட்டாளர் திருமதி பியும் பண்டார தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் மிகவும் கவலைக்குரிய நிலையை எடுத்துக்காட்டுகிறது. சீரற்ற அரசியல் முகாமைத்துவத்தினால், நிலைகுலைந்து தள்ளாடும் இலங்கையில், மக்களை காப்பாற்ற முடியாத நிலையில் அரசு இருக்கிறது என்பதுதான் இதில் புலனாகின்றது.

நாட்டை காப்பாற்ற எப்படியோ பணம் வந்தால் போதும் என்ற நிலையில் அரசு செயல்படுகின்றது. இது நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயல்படாத ஒரு மோசமான நிலையையே காட்டுகிறது.

புலம்பெயரும் லட்சக்கணக்கான இலங்கையர்களில், புத்திஜீவிகளும் தொழில்சார் நிபுணத்துவ வல்லுனர்களும் நாட்டை விட்டு வெளியேறி, தொழில் தேடி செல்கின்ற அவலம் என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு மேலும் பேரடியாக அமையும் என்பதை புரிந்து கொள்ள முடியாத செயல்பாடாகவே இது இருக்கிறது.

நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது உண்மை; பொருளாதாரம் மறைப்பெருமானத்துக்குச் சென்று விட்டது உண்மை; இதனை உடனடியாக சீர் செய்ய வேண்டும் என்பதும் உண்மை. அதற்காக, இலங்கையின் மிகப்பெரிய பொருளாதார சொத்துக்களான புத்திஜீவிகளையும் தொழில் சார் நிபுணத்துவ வல்லுனர்களையும் நாட்டை விட்டு வெளியேற்றி அவர்களின் நிபுணத்துவத்தை இழந்த நிலையில், இந்த நாட்டை எப்படி சுபீட்சத்துக்குள் கொண்டு வர முடியும் என்பதை இன்றைய அரசியல்வாதிகள் சிந்திப்பதாக இல்லை.

நாட்டுக்கு டொலர் வந்தால் போதும் என்பதே இன்றைய அரசியலின் கருப்பொருளாக இருக்கிறது. இந்த நிலை எதிர்காலத்தை மேலும் கேள்விக் குறியாக்கும் என்பதுதான் புத்தி ஜீவன்களின் புலம்பலாக இருக்கின்றது.

கடந்த வருடம் (2021) ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரை 1,013,992 பேர் புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுள்ளதாகவும், அக்காலப் பகுதியில் 1,050,024 பேர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் திருமதி பியும் பண்டார தெரிவித்தார்.

### கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள்


இலங்கை பிரஜைகளில் 4,497,122 பேர் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லுமாறு அரசாங்கம் வழங்குகின்ற ஊக்குவிப்பினால், பாடசாலை கல்வி கூட பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண வகுப்பு கற்கின்ற மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி கற்கை நெறிகளை தொடர்கின்ற மாணவர்களும் கடவுச் சீட்டு பெறுவதற்காக வரிசையில் காத்திருக்கின்றதை பார்க்கின்ற பொழுது, இந்த நாடு எங்கே போய் முடியும் என்ற கவலை ஏற்படத்தான் செய்கிறது.





தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்வோர் மற்றும் குடும்பங்களாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வோர் தொகை அதிகரித்துள்ளது.

அத்துடன் அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுப்பு ஐந்து வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையும் அவர்கள் வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பாக அமைந்து உள்ளது.

இலவச கல்வி மூலம் உலகில் வளர்ச்சி அடைந்த மிகப்பெரிய நாடு இலங்கை என்பதை எவரும் மறக்க முடியாது. அப்படி இலவச கல்வி மூலம், பல்வி கற்ற இந்த புத்திஜீவிகள், இலங்கைக்கு உழைக்காமல் இன்னும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாக கருதப்படுகிறது.

ஜனநாயகம் என்ற பெயரையும் அரசியலை சாக்கடை ஆக்கி செயல்பட்ட அரசியல்வாதிகளின் கேவலமும் தான் இதற்குக் காரணம் என்பதை நினைக்கின்ற பொழுது இந்த நாட்டின் எதிர்காலமும் நமது எதிர்காலமும் எங்கே போய் முடியும் என்பது தான் ஆதங்கமாக இருக்கின்றது.

டொலரை பெறுவதற்காக எதையும் செய்யலாம் என்ற ஒரு நிலைக்கு அரசாங்கம் இப்பொழுது வந்திருக்கிறது.

டொலரை பெற்றுவிட்டால், நாடு மீட்சி பெறும் என்பது அரசாங்கத்தின் அசையாத நம்பிக்கையாக இருக்கிறது. பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்காகவே டொலரை தேடுகின்றீர்கள். ஏற்கலாம் .... இந்த நாட்டின் முக்கிய வளங்களையும் பொருளாதாரங்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டு, இலங்கையின் பொருளாதரத்தை கட்டி எழுப்பலாம் என்று அதிகாரிகளும் அரசாங்கமும் உறுதியாகத் தான் இருக்கின்றார்கள்.

இந்த நாடு சகலதையும் இழந்து, உணவுக்காகவும் வாழ்வுக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறது. இங்கு வாழும் ஒவ்வொரு ஜீவனும் உயிர் வாழ்வுக்காக போராடிக் கொண்டுதான் இருக்கின்றன.

மக்கள்தான் ஒரு நாட்டின் பொருளாதாரம். புத்திஜீவிகளும் நமது தொழில்சார் வல்லுனர்களும் அந்தப் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள் என்பதை மறந்து விடக்கூடாது.


10 லட்சத்துக்கு மேற்பட்ட புத்திஜீவிகளும் தொழில் வல்லுனர்களும் புலம்பெயர்ந்து தொழிலுக்காக வெளிநாடு சென்றிருக்கிறார்கள் என்று அரசாங்கம் சாதாரணமாக கூறுகின்றது. இவர்கள் எல்லாம் இந்த நாட்டில் இலவச கல்வியை கற்றவர்கள். அப்பாவி மக்களின் கோடிக்கணக்கான வரிப்பணங்கள் இவர்களுக்காக செலவிடப் பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நமது அறிவு சார் நிபுணர்களை, மறைமுகமான அழுத்தங்களை கொடுத்தும் பலாத்காரமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் சம்பாதிக்கின்ற ஒரு நிலை கேவலமானது மட்டுமல்ல, நமது நாட்டை கட்டி எழுப்புவதற்கான சிறந்த செயல் திட்டமாகவும் இதனை கருத முடியாது இருக்கின்றது.

நமது நாட்டை பொருளாதார ரீதியில் வளர்க்கலாம் என்று நினைத்து இன்னொரு நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முயற்சிப்பது எந்த வகையில் நியாயம்?.. அல்லது ஆரோக்கியமான நகர்வென்று புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

நமது நிபுணர்களும் புத்திஜீவிகளும் இன்னொருநாட்டுக்குச்சென்று, அவர்களின் பொருளாதாரத்தை வளர்த்ததன் பின்பு, அதற்காக கிடைக்கின்ற கூலியை இங்கு அனுப்பி, இந்த நாட்டை வளர்க்கலாம் என்று நினைப்பது சாத்தியமான விடயமா? என்பதை நமது அதிகாரிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

விசேட விடுமுறைகளும் சலுகைகளும் வழங்கி நமது நாட்டு பொருளாதாரத்தை வெளியேற்றுவது நமது நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கு வழி வகுக்குமா? காலம் பதில் சொல்லத்தான் போகிறது...?

**இலங்கையின் மூத்த ஒலிபரப்பாளர்; மூத்த ஊடகவியலாளர்; இலங்கையில் ஆங்கிலம், தமிழில் தலைசிறந்த திறனாய்வாளர் என பன்முக ஆளுமை கொண்ட கே. எஸ். சிவகுமாரன் தனது 86 ஆவது வயதில் கடந்த 15 ஆம் திகதி காலமானார்.**



# கே.எஸ்.

## காலத்தால் அழியாத அடையாளம்

ஒலிபரப்பிலும் திறனாய்விலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக பேசும் வல்லமை மிகுந்த ஒரு சிறந்த இலக்கிய ஆளுமையாகவே கே. எஸ் திகழ்ந்தார்.

வீரகேசரி பத்திரிகை, தி ஐலண்ட் பத்திரிகை, டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் ஊடகவியலாளராக பணியாற்றிய கே. எஸ். சிவகுமாரன், தமிழ் இலக்கியம், தமிழ் சினிமா, தமிழ் சிறுகதைகளை ஆங்கிலத்தில் விமர்சனம் எழுதி, தமிழ் கலை, கலாசார பரப்பை சர்வதேச மயப்படுத்திய பெருமைக் குரியவர் கே.எஸ். சிவகுமாரன்.

இலங்கையின் நவமணி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதன் முதலாவது ஆசிரியராக (ஸ்தாபக ஆசிரியராகப்) பணியாற்றியவர். நவமணி பத்திரிகை இலங்கையில் வெளிவந்த போது ஆரம்ப காலகட்டங்களில் வாசகரை கவரும் விதத்தில் அவர் எழுதிய கட்டுரைகளும் செய்திகளும் பத்திகளும் உலகம் முழுவதும் அந்தப் பத்திரிகையை திரும்பிப் பார்க்க வைத்தது.

நான் பிரதம ஆசிரியராக இருந்த போது, தினகரனிலும் தினகரன் வார மஞ்சரியிலும் தொடர்ச்சியாக இலக்கிய கட்டுரைகளையும் விமர்சனங்களையும் எழுதி வந்தவர். அவருக்குரிய களத்தை நான் முழுமையாக கொடுத்தேன். இலகு தமிழில் ஒரு விடயத்தை இவர் சொல்லும் விதம் வாசகர்களுக்கு பசுமரத்தாணியாகவே இருக்கும்.

உடல் நிலையில் முதுமை ஏற்பட்ட நிலையிலும், அவரது உளப்பலம் சோர்வடைந்ததை நான் கண்டதில்லை .

மாடிப்படிகளால் மேலேற முடியாத நிலையிலும், லேக் ஹவுஸ் கட்டிடத்தின் படிகளில் ஏறி, மூச்சு வாங்கிய நிலையிலும் தனது கட்டுரைகளை கைகளால் எழுதி நேரில் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைக்கும் அவரது ஆர்வத் தையும் தைரியத்தையும் நான் யாரிடமும் கண்டதில்லை.

அந்தத் தள்ளாத நிலையிலும் அரைக்கால் சட்டை ஒன்றை அணிந்து கொண்டு, வெள்ளை நிற டி-ஷர்ட் உடன் அவர் வரும் அழகு... மறக்கவே முடியவில்லை...

சில வேளைகளில் அவரது வாராந்த கட்டுரையை பிரசுரிக்க முடியாத நிலை ஏற்படுவதும் உண்டு. ஆசிரியர் பீடத்துடன் கடிந்து கொள்ளாமல், பக்குவமாக பேசி காரணத்தை அறிந்து கொள்ளும் பண்பை நான் கே எஸ். சிவகுமாரனிடம் பார்த்தேன்.

அவருடைய மகனுக்கு ஒப்பான வயதில் இருக்கும் என்னை, அவர் சேர் என்று அழைக்கின்ற போது, மனம் வருந்திக் கொள்வேன். "அப்படி அழைக்காதீர்கள் அண்ணன்" என்று பல தடவை அவரிடம் சொல்லி இருக்கிறேன். என்றாலும் அவர் தன்னை மாற்றிக் கொண்டதாக இல்லை.

"எனது பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், உயர் பதவி ஒன்றில் இருக்கின்ற பொழுது, முழுமையான திருப்தியுடன் உங்களை கௌரவமாக அழைக்கிறேன். நீங்கள் அப்படி என்னை தடுக்க வேண்டாம்" என்று பல தடவை கூறியிருக்கிறார்.

ஊடகவியலாளர் இலக்கியவாதி திறனாய்வாளர் என்ற பதங்களுக்கு அப்பால், தலைசிறந்த மனிதாபிமானி ஒருவரை தமிழ் பேசும் சமூகம் இழந்து இருக்கிறது.




தமிழில் ஏராளமான புத்தகங்களை எழுதி குவித்திருக்கும் கே.எஸ்.சிவகுமாரன், ஆங்கிலத்திலும் இரண்டு நூல்களை எழுதியிருக்கிறார். படைப்பிலக்கியங்களில் மாத்திரம் அல்லாமல் பயண கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், விமர்சனங்களை எழுதி, வாழ்நாள் சரித்திரம் படைத்திருக்கும் தலைசிறந்த ஊடகவியலாளர் இவர்.

உயிர் உடலை விட்டு பிரியும் வரை முகநூல் நண்பர்களோடு உறவாடிக் கொண்டிருந்த ஒரு ஆச்சரியமான, அற்புதமான மனிதன். வாழ்க்கையின் இறுதியை நெருங்கி விட்டேன் என்பதை, சிரித்த முகத்தோடு அவ்வப்போது முகநூல் வாசகர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார்.

நீங்கள் எழுதிய ஒவ்வொரு புத்தகமும் ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எதிர்கால நம் கல்விச் சந்ததி, இவைகளை ஆய்வு செய்கின்ற போது, உங்களை யார் என்று அறிந்து கொள்ளும். ***Good bye... Anna...***

### யார் இந்த கே.எஸ். சிவகுமாரன்

1936 ஒக்டோபர் 01ஆம் திகதி கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு புளியந்தீவு, சிங்களவாடி பிரதேசத்தில் பிறந்த கைலாயர் செல்லநைனார் சிவகுமாரன், கொழும்பு நகரில் நீண்டகாலம் வாழ்ந்து வந்த நிலையில் இவர் கடந்த வியாழன் (15) இவ்வுலகை விட்டு பிரிந்தார்.

இவரது பெற்றோர் திருகோணமலையையும், மட்டக்களப்பையும் பூர்வீகமாகக் கொண்டவர்களாவர். இலங்கையிலும், பின்னர் ஓமானில் 1998 முதல் 2002ஆம் ஆண்டு வரை ஆங்கில இலக்கிய ஆசிரியராகப் பணியாற்றிய இவர், மாலைதீவிலும் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இலக்கியம், நாடகம், திரைப்படம், ஊடகங்கள், அறிவியல், செய்தித் திறனாய்வுகள், அரசியல் திறனாய்வுகள், இசை, நடனம், ஓவியம், மொழிபெயர்ப்பு, சிறுகதை, கவிதை போன்ற பல துறைகளிலும் எழுதி ஒலி, ஒளிபரப்பில் தனது பணியை முன்னெடுத்து வந்துள்ளார்.

இலங்கை வானொலியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிகழ்ச்சிகளை வழங்கிய இவர், 30 தமிழ் நூல்களையும், 2 ஆங்கில நூல்களையும், இரண்டு ஆங்கில மொழிக் கலைக் களஞ்சியங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலம், மற்றும் சிங்கள மொழிகளிலும் எழுதி வந்த அவர், ரேவதி என்ற புனைபெயரிலும் திரைப்படம் சம்பந்தமான கட்டுரைகளை ஆங்கிலத்தில் இவர் எழுதி வந்துள்ளார்.

1959 இல் நாவலாசிரியர் வரிசையில் வரதராசனாரின் இடம் என்பதே இவர் எழுதிய முதலாவது இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையாகும். ஜீவநதி சஞ்சிகை கே. எஸ். சிவகுமாரனுடைய பவள விழாச் சிறப்பிதழாக ஓர் இதழை வெளியிட்டுள்ளது.

சிரேஷ்ட தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளரும், பன்னூலாசிரியரும், வானொலி அறிவிப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமென பல்வேறு முகங்களைக் கொண்ட கே.எஸ். சிவகுமாரன், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் டெய்லிநியூஸ் பத்திரிகையில் கடமையாற்றியதோடு, தினகரன், வாரமஞ்சரி, சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளில் பல்வேறு ஆக்கங்களை எழுதி வந்தார்.



கொழும்பு 10 புனித ஜோசப் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த அவர், பேராதனைப் பல்கலைக்கழக இளங்கலை பட்டத்தை பெற்றுள்ளார்.

சாகித்திய ரத்னா விருது பெற்ற இவர் ஒரு ஆங்கில ஆசிரியருமாவார்.

அவரது மறைவு தொடர்பில் சிரேஷ்ட அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"1966 முதல் வர்த்தக ஒலிபரப்பில் அறிவிப்பாளராக இணைந்தவர். தனக்குப் பின்னே வந்த இளைய தலைமுறை அறிவிப்பாளர்களான எம்போன்றோரை வாழ்த்தி வரவேற்ற பண்பாளர். தமிழில் மட்டுமன்றி ஆங்கில சேவையிலும் அறிவிப்பாளராகப் பணிபுரிந்த முதல் சாதனையாளர். சிறிது காலம் வானொலி நிலையத்தின் செய்திப் பிரிவிலும் ஒரு செய்தி ஆசிரியராகப் பங்களிப்பினை நல்கியவர்..." என குறிப்பிட்டுள்ளார்.



# கடல் அரிப்பில் நிலப்பரப்பை இழக்கும் சல்லி கிராமம்

அ. அச்சுதன்

சல்லி ஆற்றங்கரை, சல்லி கடற்கரை, கடலின் நடுவே காணப்படும் சிறு குன்றுகள் சல்லி கிராமத்தின் சிறப்புக்கள்.

சல்லி கிராமம் நான்கு வட்டாரங்களைக் கொண்டுள்ளது. மீனவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சல்லி கிராமத்தில் இரு மீனவ சங்கங்கள் இயங்குகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரிலிருந்து பதினொரு கிலோ மீற்றர் தூரத்தில் சல்லி கிராமம் இருக்கின்றது. சாம்பல் தீவுப் பிரதான வீதி ஊடாகச் சென்று கிழக்கே பிரிந்து செல்லும் மாங்கிணாய் சல்லி வீதி வழியாகச் சென்றால் சல்லி கிராமத்தை சென்றடைய முடியும்.

இக் கிராமத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க முத்து மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. 250 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சின்னத்தம்பி என்பவருக்கு அம்பாள் காட்சி கொடுத்து, இந்த ஊரின் நன்மைக்காக இவ்விடத்தில் தன்னை ஆதரிக்கும்படி அருள் வாக்குக் கொடுத்தாளாம். இவ்வூரில் வாழ்கின்ற சைவ மக்களின் சுபீட்சத்திற்காகவும், கடற்தொழில் செய்பவர்களின் வழிபாட்டுக்காகவும் சின்னத்தம்பி என்பவர் அம்பாளை வைத்து வழிபட்டு வந்ததாகவும் வரலாறு குறிப்பிடுகின்றது. இன்று இக் கோயில் ஈழத்தில் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது.

ஆண்டா குளத்தில் உற்பத்தியாகும் செம்பியன் ஆறு, சல்லி முத்துமாரியம்மன் கோவிலுக்கருகே ஓடிச் சென்று திருகோணமலைக் கடலில் சங்கமமாகின்றது. சங்கமமாகும் இடத்திலுள்ள வெள்ளை மலைக் குன்றில் கோயில் காணப்படுகின்றது. கிழக்கு நோக்கிய வாசலையுடையதாய், கடற்கரை யோரமாகக் கோணேசர் கோயிலைப் பார்த்த வண்ணம் இக் கோயில் அமைந்திருக்கின்றது. இதுவும் சிறப்புத்தான் .

கடல் வழியாக, இக் கோயில் கோணேசர் கோவிலில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்திலிருக்கின்றது. இரவில் கோணேசர் ஆலயத்தில் ஏற்றப்படும் தீபத்தை இவ்வாலயத்திலிருந்து தரிசிக்கலாம்.

இத்தனை சிறப்புக்கள் நிறைந்த சல்லி கிராமத்தில், மீனவர்கள் தமது தொழிலினை பல்வேறு தடைகளைத் தாண்டி மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.



சல்லி முத்துமாரியம்மன் கோயிலின் தலைவரும், மலைமகள் மீனவர் சங்கத்தின் தலைவருமான தங்கவேலாயுதம் காந்தரூபன், கிராமத்தின் சாட்சியாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை உட்பட கிராமத்தின் இன்றைய நிலை குறித்தும் கருத்து தெரிவித்தார்.

எமது கிராமம் நீண்ட வரலாற்றை கொண்ட கிராமம் பிரதான தொழிலாக கடற்தொழில் காணப்படுகின்றது. எமது மீனவர்கள் மீன் வளத்தை பாதுகாக்கின்றனர். ஆனால், அயல் கிராமங்களை சேர்ந்த குறிப்பாக இறக்கக் கண்டி, நிலாவெளி பகுதியில் உள்ள மீனவர்கள் இப்பகுதியில் வந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். தடை செய்யப்பட்ட சட்ட விரோத சுருக்கு வலைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆற்று களப்பு பகுதியில் இறால் உற்பத்தி மிகவும் அதிகம்.



## மீனவ இறங்குதுறை தருவதாக அமைச்சர் டக்ளஸ் வழங்கிய வாக்குறுதி எங்கே?

### மீனவர்கள் ஆவேசம்

தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிக்கின்றனர். இதனால், எமது கிராமத்தில் உள்ள மீனவர்களின் தொழில் பாதிப்படைவதுடன் சந்தை வாய்ப்பும் குறைவடைகின்றது. மீன் வளமும் அழிக்கப்படுகின்றது. இச் செயற்பாட்டை கடற்படையினர் கண்டும் காணாமல் இருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.


சல்லி கிராமத்தில் 170 இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகள் கடற்தொழிலில் ஈடுபடுகின்றன. ஆனால், தரமான இறங்குதுறை வசதிகள் இங்கு இல்லை. சல்லிக் கிராமத்தில் உள்ள பறங்கித்துறை இறங்கு துறை புனரமைக்கப்படவில்லை.

இத்துறையில் சுமார் 80 படகுகளை நிறுத்தக்கூடிய இடவசதிகள் காணப்படுகின்றன. ஆனால், இதுவரை எவ்வித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு நாளும் கல்லுகளில் அடிபட்டு மீனவர்களின் படகுகள் சேதம் அடைகின்றன. இதனால், மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்பு அடைகின்றனர்.

அண்மையில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடத்தை பார்வையிட்டு இறங்குதுறை வசதிகளை ஏற்படுத்துவதாக மீனவர்கள் மத்தியில் வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மீனவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

சல்லி கிராமம் கடல் அரிப்பிற்கு உட்பட்டு வரும் ஒரு கிராமம். ஒவ்வொரு வருடமும் நிலப்பகுதியை இழந்து வருகின்றது. சல்லி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக சுமார் 150 மீற்றர் வரை கருங்கற்களால் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்ட போதும் ஏனைய பகுதிகளில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. கடல் அரிப்பிலிருந்து இக்கிராமத்தை பாதுகாக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.





இயற்கையின் காட்சிகள் அழகு தரும் இக் கிராமத்தில், சுற்றுலாத் துறைக்கான பகுதியாகவும் அமைகின்றது.

இச் செயற்திட்டத்திற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு இக் கிராமத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அரச அதிகாரிகளை நோக்கி இப்பகுதி மக்கள் முன்வைக்கின்றனர்.

குறிப்பாக இங்குள்ள வைத்தியசாலை பெயரளவில் இயங்குவதாகவும் நோயாளிகளிற்கு தேவையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இப்பகுதி மக்கள் கோரிக்கைகளாக முன்வைக்கின்றனர்.

எனவே குறிப்பிட்ட இவ்விடயங்களில் அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா..?



# நவராத்திரி

## வாழ்வியல் தத்துவத்தை நெறிப்படுத்தும் முப்பெரும் தேவியர் விழா

கலாபூஷணம்
கா. சந்திரலிங்கம்

இந்துமதம் வாழ்வியலை மையமாகக் கொண்டு வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக பல தத்துவங்களை உள்ளடக்கியதாக, சங்க காலத்திலிருந்து பெண்மைக்கு முதலிடம் கொடுப்பதாக காணப்படுவதோடு சிந்துவெளி அகழ் வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட சின்னங்களும் இதை வலியுறுத்துகின்றன.

சிவனுக்கு ஒரு ராத்திரியும் அம்மனுக்கு ஒன்பது இரவுகளும் கொடுத்திருப்பதிலிருந்தும் இதனை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கலை மகள், அலை மகள், மலை மகள் ஆகிய தெய்வங்களை விழா நாயகிகளாக கொண்டு இந்து மதத்தினர் மட்டுமின்றி இன்று உலகமே கொண்டாடும் மகத்தான விழாவாக கருதப்படுவது நவராத்திரி விழாவாகும். ஒரு வருடத்தில் நான்கு நவராத்திரிகளாக மாசியில் ராஜமாதங்கி நவராத்திரியும், பங்குனியில் லலிதா நவராத்திரியும், ஆடி மாதத்தில் மகா வராஹி நவராத்திரியும், புரட்டாதி மாதத்தில் சாரதா நவராத்திரியும் காணப்பட்டபோதிலும் நாம் விசேடமாக கொண்டாடும் நவராத்திரியாகக் புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரியே காணப்படுகிறது.

புரட்டாதி மாத பூர்வ பட்சத்து பிரதமை திதியிலிருந்து வளர் பிறை பிரதமை நவமித் திதி வரையிலான ஒன்பது நாட்களும் நவராத்திரி பூசையாகக் கொண்டாடப்பட்டு பத்தாவது நாளான விஜயதசமியன்று மானம்பூத் திருவிழா கொண்டாடப்படும்.

மனித சமுதாயம் உலக வாழ்க்கையில் செழிப்பாக வாழ்ந்திட வீரம், செல்வம், கல்வி என்பன முக்கியமாகின்றன. இதனை மையமாக வைத்தே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

வீரத்துக்கு அதிபதியாக காணப்படும் துர்க்கைக்கு முதல் மூன்று நாட்களும் வழிபாடும் பூசையும் நடைபெறும். துர்க்கையை வழிபடுவதால் மனதில் ஒரு எழுச்சியும், வீரமும், ஆரோக்கியமும், உற்சாகமும் உண்டாவதோடு யுகங்கள் தோறும் செய்து வந்த பாவங்கள் நொடிப்பொழுதில் அழிந்து விடுவதோடு பக்தியும், யோகமும், நிற்குணமும், ஸத்துவகுணமும், ஞானமும், எல்லா சிறப்புகளும் கிட்டும். இம் மூன்று நாட்களும் அம்மை மகேஸ்வரி, கௌமாரி, வராஹியாக அருள் பாலிப்பதாகவும் முறையே வில்வம், துளசி, முல்லை, செண்பகம் போன்ற மலர் கொண்டு பூசித்து வெண் பொங்கல், புளியோதரை, சர்க்கரை, பொங்கலிட்டு வணங்க நாம் கேட்டது கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

அடுத்துவரும் மூன்று நாட்களும் அலை மகள்; மஹா லட்சுமி, வைஸ்ணவி, இந்திராணியாக அருள் பாலிப்பதாகவும் மல்லிகை, முல்லை, ஜாதிப்பூ கொண்டு



பூசித்து அன்னம், தயிர்சாதம் போன்றவற்றை நைவேத்தியமாக வைத்து வணங்கி இத் தெய்வங்களின் அருளை பெறலாம் எனக் கூறப்படுகின்றது.

மற்றைய மூன்று நாட்களும் கலை மகள்; சரஸ்வதியாக, நரசிம்மரூபியாக, சாமுண்டியாக காட்சியளிப்பதாகவும் முறையே தாழம் பூ, தும்பை, ரோஜா போன்ற மலர்களையும், எலுமிச்சை சாதம், சக்கரை சாதம், பால் பொங்கல் போன்றவற்றையும் நைவேத்தியமாக வைத்து வணங்குவதால் அம்மையின் அருளைப் பெறலாம் எனவும் கூறப்படுகின்றது. சரஸ்வதித்தாய் வெள்ளைத் தாமரையில் வாசம் செய்து அறிவு, ஞானம், கல்வி போன்றவைகளை அளிக்கிறாள். சரஸ்வதி தேவிக்கு உலகில் கோயில் இல்லாவிடினும் தமிழகத்தில் கூத்தனூரில் கோயில் இருப்பது சிறப்பம்சமாகும்.



பொதுவாக நவராத்திரி காலத்தில் கும்பம் வைத்தல், கொலு வைத்தல், நுண்டி ஹோமம் வளத்தல் போன்றனவற்றை செய்வதால் முப்பெரும் தேவிகளும் வீட்டுக்கு வருகை தருவதோடு வீடு கோயிலாக மாறும் தன்மையை அடைகிறது. பக்தி அதிர்வுகளையும், பிரபஞ்ச சக்திகளையும், தெய்வீக சக்தியையும் பெறுகின்றது. பொதுவாக இக்காலங்களில் தாமரை, மரிக்கொழுந்து போன்றபூக்களையும், வாழை, மா, பலா, கொய்யா, மாதுளை, தோடை, பேரீட்சை, திராட்சை, நாவல் போன்ற பழங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நாட்களில் பெரும்பாலும் சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, லலிதா ஸகஸ்ரநாமம் போன்ற பாடல்களை பாடி தேவியர்களை துதிப்பர்.

நவராத்தியை தொடர்ந்து பத்தாம் நாள் விஜயதசமியன்று சிறுவர்களுக்கு ஏடு தொடங்குதல், புதிய கலைகளை கற்றல் போன்றனவும் கலைஞர்கள், தொழில் செய்பவர்கள் தங்கள் கருவிகளை வைத்து அம்மையர்களின் அருளைப் பெறுதலும் இடம்பெறும்.

அன்னையானவள் மகிடா சூரனை அழித்த கதையை மார்கன்டேய புராணம் கூறும். மஹா பாரதத்தில் கூட துர்கா தோத்திரம் இடம்பெறுகிறது. தமிழ் நாட்டை பொறுத்தவரையில் சங்க காலம் தொடக்கம் சோழர் காலம் வரைக்கும் சக்தி வழிபாடு காணப்படுவதோடு, நாயக்கர் காலத்தில் வாழ்ந்த அபிராமிப்பட்டர், குமரகுருபரர் போன்றோர் சக்தி பக்தர்களாக இருந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார், ராமகிருஷ்ண பரமஹம்சர் கூட சக்தியை வழிபட்டனர்.

புரட்டாதி மாதத்தை பொறுத்த வரையில் இறப்புக்கள் கூட இடம்பொறுவதால் அதனை "எமனின் கோரப்பல்" என அக்கினி புராணம் கூறும். இறப்பிலிருந்து உலகை காப்பாற்றவும், பெண்கள் நித்திய சுமங்கலியாக வாழவும், உலக நலம், ஐஸ்வரியம், ஞானம், வீரம் பெருகவும் நவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது.

நாமும் நவராத்திரி பூசையை முறைப்படி செய்து முப்பரும் தேவிகளின் அருளையும், அனைத்து நன்மைகளையும் பெறுவோமாக...

இளங்கலைஞர் அறிமுகம்
கு. கிலசன்



# 'ஆர்கலி' எனும் பொறியியல் நிறுவனர் பாடலாசிரியர் ஆனது எப்படி?

**ஆர்கலி** யாழ் மண்ணின் சுழிபுரம் எனும் சோழியபுரத்தை சேர்ந்தவர். தரம் மூன்று வரை சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் என்னும் பாடசாலையில் கல்வி கற்றார். பின்னர் காலச் சூழ்நிலையால் குடும்பத்தோடு இடம்பெயர்ந்து கொழும்புக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் கொழும்பு இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும் அதனை தொடர்ந்து கொழும்பு இராமநாதன் இந்து மகளீர் கல்லூரியிலும் எட்டாம் தரம் வரை கல்வி கற்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய நிலையில் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வியை தொடர்ந்தார்.

சிறுவயது முதல் அதிகம் பேசாத அமைதியான சுபாவம் கொண்ட இவருடன் எளிதில் நண்பர்கள் உருவாகினாலும் இப்படியாக குடும்பத்தாருடனான தொடர் இடமாற்றம் காரணமாக நண்பர்களுடனான இணைப்பினை தக்கவைத்து கொள்ளும் சந்தர்ப்பம் அரிதாகவே காணப்பட்டது. ஆனால் புத்தகங்களுடனான இவரது நட்பு மாத்திரம் எல்லா இடங்களிலும் புத்துயிர்த்துக் கொண்டது.

பின்னர் உயர் தரத்தில் உயிரியல் பிரிவினை தெரிவு செய்தாலும் பொறியியல் மீதான அதீத பிரியம் எப்படியோ பாடசாலை முடிந்த பிற்பாடு பொறியியல் கற்க தூண்டியது. தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பொறியியல் கல்வியை தொடர்ந்து தனது வேட்கையை வெற்றியாக்கினார்.

பெண்களுக்குகட்டட நிர்மாணத்துறைகடினமான ஒன்று என்னும் கூற்று பலர் மத்தியில் இருந்தாலும் இவை எல்லாவற்றையும் கடந்து **"ஆர்கலி இன்ஞ்சினியரிங் அன் கன்ஸ்ட்ரக்ஷன்"** என்னும் கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாண சேவைகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனம் ஒன்றை தைரியமான பெண்ணாக யாழ்ப்பாணத்தில் 2021 மார்ச் மாதம் நிறுவி வெற்றிகரமாக நடாத்தி வருகிறார்.

அத்துடன் *'Aarkali Maths Mount'* என்னும் தனியார் கல்வி நிறுவனமொன்றையும் ஆரம்பத்தில் நிகழ்நிலையில் ஆரம்பித்து இப்பொழுது வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் குறிப்பிட்ட அளவிலான ஏழை மாணவர்களுக்கு அக்கல்வி நிறுவனத்தினூடாக இலவசமாக மற்றும் சலுகை அடிப்படையில் கல்வியினையும் வழங்கி வருகிறார்.

சிறுவயது முதல் பாடக் கொப்பியின் பின் பகுதியில் நான்கு வரி கவிதைகள், சிறுகதைகள், குறுநாடகம் என கிறுக்கி வைக்கும் பழக்கம் கொண்டவரே ஆர்கலி.

பதின்நான்காவது வயதில் பாடசாலையில் இடம்பெற்ற உலக சுகாதார தினத்தில் வெளியாகிய சஞ்சிகையில் இடம்பெற்ற **"என்னது கசமா?"** என்னும் சிறுகதை இவரது முதலாவது மேடை பாராட்டை பலர் மத்தியில் அவருக்கு பெற்றுக்கொடுத்த படைப்பு. அவரது தமிழ் ஆசிரியரின் உந்துதலால் வெளிவாரியாக இடம்பெறும் மகளிர் தினம் போன்ற நிகழ்வுகளின் போட்டிகளிலும் கலந்து பரிசில்களை பெற்று தன்னை செதுக்கிக் கொண்டார்.

பின்னர் சமூக வலைத்தளங்களில் எழுத ஆரம்பித்தார். இயல்பான அவரது மொழிநடை பலரை கவர்ந்து ரசிகர்கள் ஆக்கியது. அதனை தொடர்ந்து தனது கவிதைகளுக்கு தனது அழகிய குரலால் உயிர் கொடுத்து காணொளிகளாகவும் பதிவிட்டு வந்தார்.

பாடலாசிரியர் என்னும் புதிய பரிணாம மாற்றம் **'வசீகரா'** பாடலுக்கு புதிய வரிகளை கொடுத்து 'வெண்மேகமே' என்னும் *coversong* வெளியாகி பலரது பாட்டுகளை பெற்றது. அதனை தொடர்ந்து அருந்ததி தயாரிப்பில் *CV laksh* இன் இசையமைப்பில் உருவான **'கெட்டிமேளம்'** என்னும் வர்த்தக ரீதியாக பாடலுக்கு வரிகளை எழுதும் வாய்ப்பு ஆர்கலிக்கு கிடைத்தது. இது பலர் மத்தியில் பரவலாக பேசப்பட்டு பலரது பாராட்டுகளையும் அள்ளிக் குவித்தது.

இதனை தொடர்ந்து புதிதாக வெளியாகவிருக்கும் தற்போது அதற்கான வேலையில் இருக்கும் மையல், மரங்கொத்தி போன்ற பாடல்களுக்கு வரிகளை எழுதியதுடன் மேலும் இரு *Remake coversong* க்கு வரிகளை எழுதி வெளியிடும் பணியில் இணைந்து ஈடுபட்டு வருகிறார்.

முதலாவது புத்தக வெளியீட்டுக்கான பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் கூடிய விரைவில் சமூகம் சார்ந்த ஓர் நாவலை வாசகர்கள் மத்தியில் உலாவ விட்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்த காத்திருக்கிறார். மற்றும் ஜேர்மனியில் வெளியாகி வரும் வெற்றிமணி என்னும் பத்திரிகையில் **'தனிமை அவ்வளவு கடினமானது'** மற்றும் **'கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு காரியம் நடக்கட்டும் தொடர்ந்து விடு!'** ஆகிய கட்டுரை ஆக்கங்களை தொடர்ந்து பத்திரிகையில் கட்டுரைகளையும் பிரசுரித்து வருகிறார்கள்.

மேலும் ஓர் குரல் வடிவிலான கவிதை பதிவிடும் **'ஆர்கலி கவிதைகள்'** என்னும் *youtube channel* ஐயும் , **'ஆர்கலி'** என்னும் வாசகர் மத்தியில் வரவேற்பினை பெற்ற முகநூல் பக்கத்தினையும், **'Aarkali-ஆர்கலி'** என்னும் *blog* ஐயும் தனது எழுத்து ஊடகமாக தற்போது பயன்படுத்தி வருவதுடன் நண்பர்களின் *youtube channel* க்கு *content writer* ஆகவும் இருந்து வருகிறார்.

இவரது இயல்பான எழுத்துகளும் மனதை தொடும் மொழிநடையும் வாசகர் மத்தியில் மிகப்பெரிய தாகத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்திவிடுகிறது.

கலைத்துறையின் ஆரம்ப கட்டத்தில் கடின உழைப்பினை கொடுத்து பயணித்து வரும் ஆர்கலி பல்வேறு போட்டிகள் சவால்கள் சளைக்காமல் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து தோல்விகளில் துவண்டு போகாது இதே வேகத்துடனும் வேட்கையுடனும் முயற்சிகளை முன்னெடுத்து போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் புன்னகையோடு ஓடிக்கொண்டிருக்கின்றார்.

பொறியியல் துறையில் இருந்து கொண்டு இலக்கியத் துறையில் சாதிப்பதென்பதுவே சவால் தான். நேரப் பற்றாக்குறை பொருளாதாரம், படைப்புக்களை வாசகர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் கொண்டு சென்று உலகெங்கும் சேர்ப்பது போன்ற விடயங்கள்தான் இவருக்கு பெரும் சவால்களாக இருக்கின்றன.

இலக்கியம் தன் வாழ்க்கை. பொறியியல் தன் வளர்ச்சி என்று இருதுறைகளிலும் சாதிக்கும் நோக்கோடு ஓடிக்கொண்டிருக்கும் இலக்கிய பெண் ஆர்கலிக்கு எமது அன்பு வாழ்த்துகள்.



4ஆம் பக்க தொடர்ச்சி...

### நெருக்கடியை சாதகமாக்கி...

பணத்தை அச்சிட மறுக்கும் ஒரு சுதந்திர மான மத்திய வங்கி, நிதி ஒருங்கிணைப்பை தீவிரமாக எடுத்துக்கொள்ள கருவூலத்தை கட்டாயப்படுத்தலாம். மத்திய வங்கிக் குழுக்களில் அதிக மரியாதைக்குரிய நிபுணர் களைக் கொண்டிருப்பது மற்றும் அவர்க ளுக்கு ஒரு நிலையான கால அவகாசம் வழங்குவது, அரசியல் தலையீடு இல்லா மல் வட்டி விகிதங்கள் மற்றும் இருப்புத் தேவைகள் குறித்த நீண்ட கால கொள்கை முடிவுகளை எடுக்க அவர்களை அனும திக்கும்.

பொருளாதார நிலைத்தன்மைக்கு மற் றொரு முன்நிபந்தனையான வருவாய் அடிப் படையிலான நிதி ஒருங்கிணைப்புக்கு வரி சீர்திருத்தங்கள் அவசியம். வெறும் வரி களை அதிகரிப்பதற்குப் பதிலாக, வரி அடிப் படையை விரிவுபடுத்தி, திறமையாக வரி வசூலிக்கும் முறையை அரசு செயல்படுத்த வேண்டும்.

மாநில செலவினங்களைக் கட்டுப்படுத் தவும் சீர்திருத்தம் தேவை. அரசுக்கு சொந்த மான நிறுவனங்கள் (*SOES*) அரசின் கருவூலத்தில் பெரும் வடிகால் ஆகும். இதனால் நிதிப்பற்றாக்குறை ஆழமடைந் துள்ளது. ஆளும் கட்சிகள் குறுகிய கால அரசியல் ஆதாயங்களுக்காக *SOES* களைப் பயன்படுத்துவதால், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் நிர்வாகம் திறனற்றதாக உள்ளது, இதன் விளைவாக *SOES* களுக் கான நீண்ட கால நிலையான மூலோபாயத் தில் கவனம் இழக்கப்படுகிறது. *SOES* களின் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சகங் களால் நியமிக்கப்படுவதால், அவர்கள் அரசியல் கட்சி விசுவாசிகளாக இருக்கி றார்கள்.

நிதி வெளிப்பாடுகள் மற்றும் சுயாதீன தணிக்கைகள் தேவைப்படும் சட்டங்கள் மூலம் இந்த இழப்பைச் செய்யும் அரசு நிறுவனங்களை மறுகட்டமைக்கும் வடிவத்தில் சீர்திருத்தங்கள் வர வேண்டும். *SOES*கள் கருவூலத்தால் நிபந்தனையின்றி ஆதரிக்கப்படுவதால், மற்ற மாநில நிறுவனங்களிடமிருந்து, குறிப்பாக மாநில வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவதால், அவற்றின் வரவு செலவுத் திட்டங்களை சமநிலைப்படுத்த அவர்களுக்கு சிறிய ஊக்கத்தொகைகள் இல்லை. *SOES*கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களை சமநிலைப்படுத்த வேண்டும் மற்றும் கருவூலத்தின் ஆதரவை கட்டுப்படுத்துவது நிதி ஒழுக்கத்தை கொண்டு வரலாம்.

பல *SOE*கள், இதில் உள்ள நன்மைகள் மற்றும் அபாயங்களை முறையாக மதிப்பிடுவதற்கு ஒரு முழுமையான ஆய்வுக்குப் பிறகு தனியார்மயமாக்கப்பட வேண்டும். பல்பொருள் அங்காடிகள், ஹோட்டல்கள் மற்றும் விமான நிறுவனங் கள் போன்ற வணிக நலன்களைக் கொண்டி ருக்க ஒரு அரசு நிறுவனம் தேவையில்லாத நிலையில், போட்டித் துறைகளில் *SOES* களை தனியார் மயமாக்கக் கூடாது என்ப தற்கு எந்தக் காரணமும் இல்லை.

தாய்லாந்து 1997 இல் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் செய்தது போல், சில இலங்கை *SOES* கள் மறுசீரமைக்கப்பட்டு பெருநிறுவனமயமாக்கப்பட வேண்டும், எனவே, அவை எதிர்காலத்தில் தேவை ஏற்படும் போது தனியார்மயமாக்கப்படும்.

பல தசாப்தங்களாக இலங்கை அனுப வித்து வரும் நடப்புக் கணக்குப் பற்றாக் குறையைக் குறைப்பதற்கும் சீர்திருத்தங்கள் தேவை. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி நாட்டை மாற்றுவதே இலக்காக இருக்க வேண்டும். இறக்குமதி மாற்றீட்டை மையமாகக் கொண்டு இலங்கைத் தொழில் துறைகளைப் பாதுகாக்கும் பிராந்தியத்தில் இலங்கை அதிக கட்டண விகிதங்களைக் கொண்டுள்ளது.

சுமார் 80 பில்லியன் டொலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்ட ஒரு சிறிய நாடு இலங்கை. இலங்கை சந்தைக்காக முழுவதுமாக இலங்கையில் பல தயாரிப்பு களை உற்பத்தி செய்ய முயல்வது என்பது, குறைந்த தரம் மற்றும் அல்லது அதிக விலை கொண்ட தயாரிப்புகளை விளைவிப்பதன் மூலம் பொருளாதாரத்தை குறைக்கிறது. அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரண மாக குறுகிய காலத்திற்கு கட்டண விகிதங் களைக் குறைப்பது ஒரு விருப்பமல்ல, ஆனால் பொருளாதாரம் ஸ்திரமடையும் போது, தேசத்தை ஏற்றுமதி சார்ந்த பொருளா தாரமாக மாற்றுவதற்கான ஒரு மூலோபாயம் செயல்படுத்தப்பட வேண்டும். கட்டண விகிதங்கள் அதிகமாக இருந்தாலும், நாட் டில் நிலவும் பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்க அளவு கட்டுப்பாடுகளை நீக்குவது பரிந்துரைக்கப்படும்.

உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் ஒரு பகுதியாக இருக்கும் உற்பத்தியில் உலக ளாவிய போக்குடன் இலங்கை செல்ல வேண்டும். வியட்நாம் போன்ற வளரும் நாடுகளின் மூலோபாயமாக இருக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் விநியோகச் சங்கிலிகளில் மேற்கொள்ளக்கூடிய முக்கிய மதிப்புக் கூட்டல்களைக் கண்டறிவதே இலங்கை தனது ஏற்றுமதியை அதிகரிப்பதற் கான ஒரு சிறந்த வழியாகும். உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுடன் இலங்கை இணைவதற்கு, நாட்டில் வர்த்தக தாராள மயமாக்கல், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட *FDI*, அதிகரித்த குவியுக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வர்த்தக வசதி கள் தேவை. இலங்கையில் மூன்று சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மட்டுமே உள்ளன.

அதே சமயம் வியட்நாம் அதன் பொருளா தாரத்தை மிகவும் பிற்பகுதியில் திறந்த நிலையில் 26 ஐக் கொண்டுள்ளது. தற்போ துள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை, குறிப்பாக இந்தியாவுடன் ஏற்றுமதியை அதிகரிக்க இலங்கையும் உத்திகளை மேற்கொள்ளலாம்.

ஏற்றுமதி-இலக்கு எஃப்.டி.ஐ. களில் வருவதற்கு குவியுகள் தேவைப்படுகின்றன. இலங்கைக்கு ஒரு மூலோபாய இருப்பிடம் உள்ளது, அது அதன் மூலம் பயன்பெற முடியும்.

உலக வங்கியின் இலகுவான வர்த்தகத் தரவரிசையில் இலங்கை உலகில் 99 ஆவது இடத்தில் இருப்பதால், எளிதாக வியாபா ரம் செய்வதை மேம்படுத்துவது அவசிய மாகும். 2020 ஆம் ஆண்டில் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை 164 வது இடத்தில் உள்ளது, இது மேம்படுத் தப்பட வேண்டும்.

காரணி சந்தை சீர்திருத்தங்கள் முக்கி யமானவை.

நாட்டில் 82 வீதமான காணிகளை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது, இது தனியார் துறைக்கான காணி பாவனையை கடுமையாக கட்டுப்படுத்துகிறது. அரசாங்க நிலம் குத்தகைக்கு விடப்படுகிறது. இதில் இரண்டு குறைபாடுகள் உள்ளன. ஏனெனில் நிலத்தை ஆக்கிரமித்துள்ள குத்தகைதாரர் அதை பிணையமாகப் பயன்படுத்த முடியாது மற்றும் குத்தகைதாரர் நிலத்தில் நீண்டகால முதலீடுகளைச் செய்யக்கூடாது.

நிலம் துண்டாடப்படுவதும் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இது பெரிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிலப்பரப்பு பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. முதலீடு களை ஈர்ப்பதில் நிலத்திற்கான சரியான மதிப்பீட்டு முறையும் முக்கியமானது.

பொருளாதாரத்தை அதிக போட்டித் தன்மை கொண்டதாக மாற்ற தொழிலாளர் சீர்திருத்தங்கள் தேவை. உலகிலேயே அதிக ஆட்குறைப்புச் செலவுகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளது.

இது முதலீட்டாளர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக இல்லை. சிறந்த தொழிலாளர் உற்பத்திக்கு, எதிர்காலத் தயாரான பணியாளர்களுக்கான பகுப்பாய்வு சிந்தனை மற்றும் புதுமை போன்ற எதிர்கால திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்து வதன் மூலம், தொழிலாளர் சக்தியை கல்வி மற்றும் பயிற்சி மூலம் உருவாக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதார செயல்திறன் ''வர்த்தக செயல்திறன்'' (வெளிப்புற நிதி) விட ''செலவு செயல்திறன்'' (உள்நிதி) மூலம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இரட் டைப் பற்றாக்குறை கருதுகோள், அத்தகைய நாடுகள் இரு கணக்குகளிலும் (அரசு பட்ஜெட் மற்றும் சர்வதேச வர்த்தகம்) நீடிக்க முடியாத பற்றாக்குறையுடன் முடிவடையும் என்று கூறுகிறது, அதே நேரத்தில், வெளி நிதியில் கவனம் செலுத்தும் நாடுகள் இரண்டையும் மேம்படுத்த முனைகின்றன.

இவ்வாறு, இலங்கை தனது நிதிப் பற்றாக் குறை மற்றும் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவுபடுத்துவதன் மூலம், அதன் அதிகப் படியான செலவினச் சிக்கலைத் தொடர்ந்து மோசமாக்கியது. இதன் விளைவாக, வர்த்தகம் அல்லாத துறை வளர்ச்சிக்கு எதிராக வர்த்தகம் செய்யக்கூடிய துறை வளர்ச்சி குறைந்தது. இது முதன்மையாக அரசாங்க செலவினங்களால் நிதியளிக்கப் பட்டது மற்றும் நீண்ட காலத்திற்கு நீடிக்க முடியாதது.

வர்த்தகம் அல்லாத துறை வளர்ச்சியில் இருந்து ரூபாய் மதிப்பிலான வருமானத்தை ஈட்டும் போது டாலர் மதிப்பிலான கடன் களை எவ்வாறு செலுத்துவது என்பதுதான் அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டிய அடிப்படைப் பிரச்சனை.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் அத்துடன் மீட்சிக்கு அப்பால் நகர்வதற்கும் இலங்கை தனது அந்நிய செலாவணி ஈட்டும் திறனை மேம்படுத்த வேண்டும். ஒரு நடுத்தர கால நடவடிக்கையாக நிதி ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. ஆனால் நாட்டின் ஏற்றுமதி எதிர்ப்பு மற்றும் *FDI* எதிர்ப்பு சார்புகளை அகற்ற சீர்திருத்தங்கள் நீட்டிக்கப்பட வேண்டும். நெருக்கடி என்பது தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற் கான முன்னோடியில்லாத வாய்ப்பு - தவற விடக்கூடாது.

19ஆம் பக்க தொடர்ச்சி...

### வாசித்தலில் இருந்து

இந்த சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன.

வழிகாட்டல்கள் இருந்தால்தான் அடுத்த தலைமுறைக்கான தலைவர்களாக தற் போதைய இளஞ் சமுதாயத்தினரை உரு வாக்க முடியும்.

இந்த கோவிட் பெருந்தொற்றுக் காலத் தில் 15 ஆயிரம் புத்தகங்கள் என்ற அடிப் படையில் மாணவர்களை எழுதத் தூண்டி னார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலான மாணவர்களே எழுத முன்வந்தார்கள்.

எழுத்தாற்றல், வாசிப்புத் திறமைகளுக் காக கல்வி அமைச்சு எடுக்கின்ற முயற்சி களைத் தொடர்ச்சியாக செய்ய முடியாமல் அல்லது ஊக்குவிக்க முயடியாமல் இருப்பது பின்னடைவாகவே பார்க்கப்பட வேண்டும்.

மாணவர்களை எழுத்தின்பால் ஊக்கு விப்பதற்கு கல்வி அமைச்சு முயற்சிக் கிறது. ஆனால், அந்த முயற்சி தோற்றுப் போகிறது'' என்றார்.

இளமை முதல் இறக்கும் வரை இடை விடாது கற்றாலும் ஒருவரால் கல்வியில் முழுமை அடைய முடியாது. எனவேதான் 'கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு' என்னும் தொடர் மக்களிடையே நிலவுகிறது

கற்றவர்க்குக் கல்வியே ஒரு செல்வமாக உதவும் தன்மை கொண்டது. கல்விதான் இவ்வுலகில் வாழும் தகுதியை நமக்குத் தருகிறது.

# இலங்கை லெஜன்ட்ஸின் அரையிறுதியில் மாற்றம்




இலங்கை லெஜன்ட் மற்றும் மேற்கிந்திய தீவுகள் லெஜன்ட் அணிகளுக்கு இடையிலான வீதிப் பாதுகாப்பு உலகத் தொடரின் அரையிறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை மாற்றப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை நடைபெற விருந்த இந்தப் போட்டி திகதி மாற்றப் பட்டிருக்கும் அதே நேரம் நேற்று நடைபெற்ற இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் லெஜன்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான முதல் அரையிறுதிப் போட்டி பாதியில் இடைநிறுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. லெஜன்ட்ஸ் 17 ஓவர்களில் ஐந்து விக்கெட்டு களை இழந்த நிலையில் இடைநிறுத்தப்பட்ட இந்தப் போட்டி இன்று மாலை 3.30க்கும் ஆரம்பமாகிறது.

டி.எம். டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜன்ட்ஸ் அணி ஆரம்பச் சுற்றுப் போட்டிகளில் தோல்வியுறாத அணியாகவே அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி வரும் ச னிக்கிழமை (01) மாலை 7.30க்கு ரைப்பூரில் திட் டமிட்டபடி நடைபெறும்.

# பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமடைச் செய்த பூகோள அரசியல்!

## ஆசிய அபி. வங்கி மாநாட்டில் ஜனாதிபதி




கொவிட் தொற்றுநோய் மற்றும் உக்ரேன் யுத்தம் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார ஸ்திரமின்மையின் பாதகமான விளைவுகள், உணவு, எரிபொருள் மற்றும் உரம் என்பவற்றின் விலைகள் அதிகரித்து, பாரிய சுமையாக மாறியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகளாவிய அரசியல் போக்குகள் பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸின் மணிலா நகரிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நேற்று (29) காலை நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தின் பிரதான அமர்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினான்ட் ஆர்.மார்கஸ் (ஜூனியர்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விகிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

“உணவு மற்றும் எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சியை குறைத்துள்ளதுடன், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் வசிக்கும் நடுத்தர குடும்பங்களின் வாழ்க்கை முறையில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பெரும் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில், நாட்டின் கடன் நிலைத்தன்மையை மீளமைப்பதற்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் கடனை நிலைநிறுத்துவதற்கான இந்த முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆழமான மற்றும் அழுத்தமான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் அதேவேளை சமூகத்தில் அதிகம் பாதிக்கப்படக் கூடிய தரப்பினர் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப சமூகப் பாதுகாப்பிற்கு அதிக நிதி மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. எமது பொருளாதாரத்தை இன்று நாம் ஸ்திரப்படுத்தியுள்ளோம். நாம் எவ்வாறு இந்த நெருக்கடியை தீர்க்கிறோம் என்பதை பல நாடுகளைப் போலவே பங்குதாரர்களும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்” என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, பிலிப்பைன்ஸிற்கான இலங்கை தூதுவர் ஷோபினி குணசேகர மற்றும் இலங்கை தூதுக்குழுவினர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் 55 ஆவது வருடாந்த கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களுக்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மதிய விருந்து வழங்கினார். இதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட அதிதியாக கலந்துகொண்டார்.

# மஹிந்த இல்லத்தில் நவராத்திரி பூஜை: சுப்ரமணியம் சுவாமி அதிதி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாடு புதன்கிழமை (28) இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இச்சிறப்பு வழிபாட்டில், இராஜ்யசபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

நவராத்திரி என்பது வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைக் குறிக்கும் தெய்வங்களான துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகியோரை நினைவுகூர்ந்து, ஒன்பது இரவுகள் நடத்தப்படுகின்ற பூஜை வழிபாடுகள் ஆகும்.





வடக்கு கிழக்கில் போதை... 3ஆம் பக்க தொடர்ச்சி...

மாணவர்களையும் இளைஞர்களையும் போதைக்கு அடிமையாக வைத்திருந்தால் அவர்கள், அதைத் தாண்டி தமது உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் தொடர்பில் சிந்திக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகத்தான் இந்தப் போதைப்பொருள் வடக்கு – கிழக்கில் திணிக்கப்படுகின்றது.

போதைப் பொருள் வடக்கு – கிழக்குப் பகுதியூடா கக் கொண்டு வரப்படுவதும் அது இலகுவில் கிடைக்கக் கூடிய வகையில் செய்யப்பட்டிருப்பதும் தெரியாத விடயமல்ல. கடமைக்காக மாதத்துக்கு ஒரு கைதுகள் மேற்கொள்ளப்படும் நாடகமும் நாம் அறியாத விடயமல்ல.

எமது இளைஞர்களும், பெற்றோரும் விழித்துக்கொள்ள வேண்டிய தருணமிது. இதில் தேசநலன் விரும்பிகள், மதத் தலைவர்கள். பொது அமைப்புக்கள் போன்ற சமூக நலன் சார்ந்த அனைவருக்கும் மிகப்பெரிய பொறுப்பும் மீறமுடியாத கடமையும் உள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக்காக நாம் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய சமூகமாகிய நாம் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

சகல தொடர்புகளையும்.... 3ஆம் பக்க தொடர்ச்சி...

தற்போதைய அமைச்சரவையில் பெரும்பான்மையானவர்கள் பசில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் அல்ல. அமெரிக்கா செல்வதற்கு முன், பசிலும் மிக நெருக்கமான குழுவை அமைச்சரவையில் சேர்க்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்நிலைமையின் அடிப்படையில் குறிப்பிட்ட காலத்துக்கு அரசியல் நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க பசில் ராஜபக்ச தீர்மானித்துள்ளார்.

சகல தொடர்புகளையும்.... 3ஆம் பக்க தொடர்ச்சி...

அலி சப்ரி ரஹீம், ரோஹித அபேகுணவர்தன, வஜிர அபேவர்தன, சிவநேசதுரை சந்திரகாந்தன், சம்பிக ரணவக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்கவும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டிருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த 20.09.2022 ஆம் திகதி தேசிய பேரவையை உருவாக்குவது தொடர்பான பிரேரணையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்ததுடன், இப்பிரேரணை எதிர்ப்பு இன்றி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இதுவரை பெயரிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை சபாநாயகர் கடந்த செப்டெம்பர் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

தேசிய பேரவையின் முதலாவது கூட்டத்தின் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேசிய பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

தேசிய ரீதியில், பாராளுமன்றத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், பொது மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் காணப்படும் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதற்கும் திறக்கப்பட்ட புதியதொரு கதவாக இது அமையும் என்றும் குறிப்பிட்டார்.

சகல பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் வியாழக்கிழமை தேசிய பேரவையைக் கூட்டுவதற்கும் நேற்று (29) தீர்மானிக்கப்பட்டது

### சுமந்திரன் கடுமையான விவாதம்;

# குருந்தூர் மலை காணி விவகாரத்தில் கைதாகிய லோகேஸ்வரன் விடுதலை

குருந்தூர்மலையைச்சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்பொருள் திணைக்களம் அபகரிக்க முயற்சிக்கின்றமை மற்றும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் தொடர்ந்து பௌத்த கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து கடந்த 21 அன்று குமுழமுனை மற்றும், தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனை பொலிசார் விசாரணைக்கு அழைத்து கைதுசெய்து, பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இந் நிலையில் பொலிசார் லோகேஸ்வரன் தொடர்பில் அடையாள அணிவகுப் பொன்றை கோரிய நிலையில், இம்மாதம் 29 ஆம் திகதிகதிவரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அந்தவகையில் நேற்று குறித்த வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் லோகேஸ்வரனை சிறைக்குள் தள்ளவேண்டும் என்ற தீய நோக்குடன் பொலிசார் அடையாள அணிவகுப்பை உபயோகித்திருக்கின்றார்கள் என லோகேஸ்வரன் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் சுட்டிக்காட்டி கடுமையான வாதத்தில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்று லோகேஸ்வரனை விடுதலைசெய்ததுடன், இந்த வழக்கானது எதிர்வரும் 02.02.2023ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.



# கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் 175வது ஆண்டு விழா

கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் 175வது ஆண்டுவிழா கடந்த மாதம் கல்முனை மெதடிஸ்த ஆலயத்தில் கல்முனை சேகர முகாமைக்குரு அருட்திரு சுஜிதர் சிவநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவைத் தலைவர் அருட்திரு W.P.E. எபனேசர் யோசப் அவர்களும் சிறப்பு அதிதியாக வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்கலாநிதி மு. து. அருள்ராஜா அவர்களுடன் இலங்கை மெதடிஸ்த திருச்சபை திருப்பேரவை உப தலைவர் திருமதி ரோஸினி பீரிஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

காலையில் ஆலயத்தில் வழிபாடு நடைபெற்றதுடன் கடந்த காலங்களில் கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் பணியாற்றிய ஊழியர்களின் விபரங்களைக் கொண்ட விளம்பரப் பலகைத் திறப்பும் இடம்பெற்றது.

மாலை நிகழ்வில் கல்முனையில் பணியாற்றியவர்களின் புகைப்படங்களை திறந்து வைக்கும் நிகழ்வும் “கிறிஸ்துவின் பணியில் 175 வருடங்கள்” என்ற நூல் வெளியீடும் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருப்பேரவைத்தலைவர் அருட்திரு W.P.E. எபனேசர் யோசப், வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்கலாநிதி M.T. அருள்ராஜா மற்றும் திருப்பேரவை உப தலைவர் திருமதி ரோஸினி பீரிஸ் அவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மலர் வெளியீட்டு உரையினை முன்னாள் திருப்பேரவை உப தலைவர் திரு வடிவேல் பிரபாகரன் நிகழ்த்தினார்.

## இரத்த தான நிகழ்வு

175 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்குமுகமாக இரத்த தான நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் பல வாலிப யுவதிகளும் பாதுகாப்பு படையினரும் பங்குபற்றினர்.

இந்நிகழ்வை கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் ஆண்கள் சங்கம் ஒழுங்கு செய்திருந்ததுடன் கல்முனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி ஊழியர்கள் சிறப்பான பங்களித்திருந்தனர்.























# இலங்கை வரலாற்றில் கறையாகும் சபலம்

சரித்திரப் பார்வை

சஞ்சீவி சிவகுமார்

இலங்கை வரலாறு எழுதப்பட்ட ஆரம்ப முதல் அது இனத்துவ முதன்மைப்படுத்தலுடன் எழுத ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகவே காண முடியும்.

மகாவம்சம் முதலான நூல்களில் இந்தப் போக்கை அவதானிக்கலாம். அதையும் தாண்டி இலங்கை வரலாறு பல அபத்தங்களையும் சுவாரசியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் மிக அறியப்பட்ட சமஸ்கிருத மொழிப் புலவராக இருந்தவர் மகாகவி காளிதாசர். குமார சம்பவம், மேகதூதம், ரகுவம்சம், சகுந்தலா முதலான காவியங்களை எழுதியவர். இக்காலப்பகுதியில் இலங்கையில் குமாரதாசன் எனும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். மன்னன் குமாரதாசன், கவி காளிதாசனின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் எனக் கூறப்படுகின்றது. இருவரும் நெருங்கிய சிநேகிதர்களாகவும் கூறப்படுகின்றது. கவி காளிதாசரின் வாழ்க்கைச் சரிதத்தில் அவிழ்க்க முடியாத முடிச்சியாக அவரது துர்மரணம் இலங்கை விபச்சாரியான கமணியின் வீட்டில் நிகழ்கிறது.



ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையின் “இலங்கை சரித்திர சூசனம்” மற்றும் மகாவம்சம் தரும் செய்திகளின் படி மன்னன் குமாரதாசன் பரத்தையான கமணியின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வருபவன். தனது நண்பனான காளிதாசன் இலங்கை வந்திருப்பதாக கேள்வியுற்ற அவன் காளிதாசன் எப்படியும் கமணியின் வீட்டுக்கு வருவான் என எண்ணி அவளது வீட்டின் அறைச் சுவரில் ஒரு கவிதையின் ஆரம்ப வரிகளை எழுதிவிட்டு அதை சரியாக முடிப்பவர்களுக்கு நாட்டின் பாதியைப் பரிசளிப்பதாக அறிவித்து விடுகிறான்.

அங்குவந்த காளிதாசன் இதைக் காண்கிறான். மீதிக் கவிதையைப் படைக்கிறான். அதன் சமஸ்கிருத மூலம் வருமாறு:

बाले तव मुखाम्भोजे कथमिन्दीवरद्वयं
कमले कमलोत्पत्तिः श्रूयते न तु
दृश्यते ।

காளமேகப் புலவரின் “முண்டகத்தில் கருநீலம் பூத்ததுண்டு கண்டதுண்டு கேட்டதில்லை” எனும் கவிதையை அப்படியே ஞாபகப்படுத்தும் “தாமரைப் பூவின் மீது பூத்திருக்கும் மற்றுமிரு தாமரை மலர்களான விழிகளை காண்கிறேன். ஆனாலும் இதைக் கேள்விப்பட்டதில்லை” என பொருள்படும் கவிதை அது.

கவிதை எழுதிய ஓலையை பெற்ற கமணி பரிசுப்பொருளை தானே பெற்றுக்கொள்ளும் நோக்கில் அந்தப் பெருங்கவியை திட்டமிட்டுக் கொன்றுவிடுகிறாள் என்கிறது வரலாறு.

இக்கதையை பொதுப் படையாகப் பார்க்கும் போது மன்னன் உட்பட பிரதானிகள், பெருமக்கள் எல்லாம் விபசாரிகளிடம் வாடிக்கையாளர்களாக இருப்பதான தோற்றம் ஏற்படுகின்றது. விபசாரியின் வீட்டுச் சுவர் அரசன் போட்டியை அறிவிக்கும் இடமாக அமைவதும் முகஞ்சுளிப்பை ஏற்படுத்துகின்றது. அது மட்டுமன்றி ஆட்சி மொழியாக சமஸ்கிருதம் இருந்ததையும் இங்கு நோக்க வேண்டும். (1955 மற்றும் 1966களில் வெளிவந்த மகாகவி காளிதாஸ் குறித்த திரைப்படங்கள் அவரின் இறுதி மரணம் குறித்து சில மாற்றங்களுடன் அமைக்கப்பட்டிருந்தனஎன்பது குறிப்பிடத்தக்கது)

துட்டகைமுனு எல்லாளனுடன் பல முறை போரிட்டுத் தோற்றுப் போகிறான். உருகுணைக்குத் தப்பியோடி பெரும்படையுடன்எல்லாளனை வெல்வதற்காக பெரும் பிரயத்தனம் ஒன்றை எடுக்கிறான். வருடக் கணக்கான காலம் அவனது படை அனுராதபுரம் நோக்கி நகர்கிறது.



வழியில் மகாவலி ஆற்றின் மருங்காக 31 தமிழ் மன்னர்களின் கோட்டைகளையும் படைகளையும் எதிர்கொள்ள வேண்டி வருகிறது. அம்பதீர்த்தம், சரப்பக்கோட்டை, அந்தரசொர்ப்பம் எனப் பெயர் கொண்ட பல தமிழர் படைத்தளங்களை எதிர்கொள்கிறான். அதில் அம்பதீர்த்தம் கோட்டையை 4 - 5 மாதங்களாகியும் வெற்றி கொள்ள முடியவில்லை. அம்பதீர்த்தத்தின் படைத்தளபதியான தீத்தம்பன் பெண் விடயத்தில் பலவீனமானவன் என்பதை துட்டகைமுனு அறிகிறான். தன் தாய் விகாரமகா தேவியை தத்திம்பனுக்கு அளித்து வெற்றியைத் தனதாக்கியதாக கூறப்படுகின்றது. நம்புவதற்கு கடினமான அருவிருப்பானதான கதையான இதை மாகாவம்சம் (அத்தியாயம் XXV :08), மற்றும் பரணவிதானவின் இலங்கை சுருக்க வரலாறு ஆகியன உறுதிப்படுத்துகின்றன.

விபரீதக் காம ஆசையால் தன் கணவனான சோரநாகனை நஞ்சூட்டிக் கொலை செய்யும் அனுலாதேவியின் வரலாறு மற்றோரு களங்க வரலாறாகும். அவனைக் கொன்றபின் திசா என்பவனை மணந்து அவனை அரசனாக்குகின்றாள். அவனையும் கொலை செய்துவிட்டு சிவா என்பவனை மனம் புரிகின்றாள். அதன் பின் வாதுகன், தீசன், நீலியான் என பலரைக் கணவராக்கி அரசாள வைக்கிறாள். இறுதியில் தானே அரசியாகிறாள் அனுலா.

தமிழ் நூல்கள் சில இவள் பெயரை ‘அனலை’ எனக் குறிப்பிடுகின்றன. இவளது காமத் பசிக்கும் ஆசைக்கும் 32 அரண்மனைக் காவலர்களும் உட்பட்டனர் என கலாநிதி குணராசா குறிப்பிடுவார் (ஈழத்தவர் வரலாறு).

வரலாற்றின் இழுக்கான பகுதிகளாக இத்தகைய சபலங்களின் வெளிப்பாடுகள் இலங்கை வரலாற்றில் பல்வேறு இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆதிக்கத் தேவை மட்டுமன்றி அந்நிய அடக்குமுறையாகவும் சாதிய மேலாண்மையாகவும் கூட அவற்றைக் காணலாம்.



# அடிமைத்தனம்

## பெற்றோர்களே பிள்ளைகளில் கவனமாக இருங்கள்

பாத்திமா நபிலா

ஏதாவது ஒரு பழக்கம் தொடர்பில் அதிகமான ஈடுபாடு ஏற்படுவதன் மூலம் இந்த அடிமைத்தனம் ஏற்படுகின்றது. அது உள்ளத்திலும் சரி உடலிலும் சரி இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்.

உதாரணமாக மது, போதை, ஆபாசம், புகைப்பிடித்தல் போன்றவற்றால் ஏற்படக்கூடிய விளைவாகும்.

இது தொடர்பில் அதிகமாக மூளையில் சமநிலையற்ற தன்மை ஏற்படும்.

### போதை

போதை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். எப்போது வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் ஒருவரை அடிமையாகும் தன்மை இதற்கு உண்டு. இதனால் ஈர்க்கப்படுபவர்களின் வாழ்க்கையை சரித்து மகிழ்ச்சியை முற்றாக ஒழிப்பது மட்டுமின்றி அவர்களின் உடல் நலத்தை பாதிக்கவைத்து அவர்களை கடனாளியாக தெருவில் நோயாளியாக மாற்றி விடுகிறது.

போதைப் பழக்கம் அதிகரித்துள்ளது என்பதற்கு சான்றாக பிள்ளைகளின் கை களில் தொலைபேசியையும், தெருவோரக் கடைகளில் சிகரெட்டும் கையுமாக அழையும் மனிதர்களைக் காணலாம்.

இன்றைய காலகட்டத்தில் மது, ஆபாசம், போதைப்பொருள் இவை அனைத்தும் அனைவருக்கும் மிக எளிதாக மக்க ளுக்கு கிடைக்கின்றது. 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு புகையிலை பொருட்களை பயன்படுத்தல் தடை செய்யப்பட்ட போதிலும் தற்போது கல்லூரி மாணவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் போதை மற்றும் ஆபாசம் என இதனை உபயோகிப்பது குறித்து சந்தேகம் இல்லை.



### போதைப் பழக்கத்தை தூண்டும் காரணிகள்

1. ஆர்வம் (curiosity )
2. பிறரிடம் இருந்து கற்றுக் கொள்வது (learned behaviour)
3. சுய விருப்பு
4. புறக்கணிப்பு

### பெற்றோர்களுக்கான எச்சரிக்கை

» உங்கள் பிள்ளைகள் பொய் கூறி காசு கேட்பார்கள் அல்லது உங்களுக்கு தெரியாமல் திருட்டுத்தனமாக எடுப்பார்கள்.

» உதடு, பற்களில் கரை, சோர்வு, முகப் பாவனை, தனிமை, எரிச்சல் குணம் என்பன தென்பட்டால் கவனம் செலுத்துங்கள்.

» நன்றாக பேசிய பிள்ளைகள் திடீர் என பேசாமல் இருப்பது, அது குறித்து மாணவர்களை கவனம் செலுத்துங்கள்.

» போதைக்கு அடிமையாகி உள்ளார் என்பது தெரிய வந்தால் அடிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது.

» அதன் விளைவு குறித்து அன்பாக அறிவுரை கூறுங்கள்.

### பெற்றோர் பங்களிப்பு

» பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னால் சண்டையிடுதல், புகைப்பிடித்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

» பிள்ளைகளுடன் மனம் விட்டு பேச வேண்டும்.

» உங்கள் பிள்ளைகளை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டு பேச வேண்டாம். அவ்வாறு செய்தால் உங்கள் பிள்ளைகள் உங்களை வெறுக்க நேரிடும்.

எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோர்களே உங்கள் கைகளில் .

# சந்திரனிலிருந்து கொண்டுவரப்பட்ட மண்ணில் தாவரங்கள் வளர்ப்பு



புளோரிடா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் (UF/ IFAS) மூன்று நாசா பயணங்களில் சந்திரனிலிருந்து கொண்டுவரப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட மண்ணில் தாவரங்களை வெற்றிகரமாக வளர்த்துள்ளனர்.

ராப்/ பெரல் மற்றும் அன்னா லிசா பால், (UF/IFAS) தோட்டக்கலைத் துறை, சந்திரனிலிருந்து மண்ணில் தாவரங்களை வளர்க்க முடியும் என்பதை காட்டிய முதல் விஞ்ஞானிகள் ஆவார்கள்.

இது சந்திரனிலிருந்து செவ்வாய் அல்லது பிற கிரகங்களுக்கு விண்வெளி பயண பயணங்களை உருவாக்குவதற்கான முக்கிய முதல் படியாகும்.





# திருக்கோணேஸ்வரர் ஆலய காணியை அபகரிக்க சதித்திட்டம்

ஸ்ரீ நேசன் எம். பி

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இன்று வரை தமிழர்களின் தாயக நிலத்தைச் சிதைத்து சின்னா பின்னப்படுத்துவதற்கு சிங்கள பௌத்த அதிகாரவர்க்கம் நுட்பமாகச் செயற்பட்டு வருகின்றது.

இன்றைய நிலையில் வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர்களுக்கும் சற்று அதிகமான காணியினைக் கையக்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சம்பந்தரால் தேவாரப்பாடல் பெற்ற ஆலயத்தின் காணியை, சம்பந்தர் ஐயா திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற காலத்தில் அபகரிக்க முயற்சிப்பது இரட்டிப்பான வேதனைகளை தமிழர்களுக்கு அளிக்கின்றது. இதனைத் தடுப்பதற்காக திருக்கோணேஸ்வர ஆலய அறங்காவலர்கள், சைவப் பெருமக்கள், தமிழ்த்தேசிய பற்றாளர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள். அதற்கான அரசியல் பலத்தினை தமிழ் அரசியல்வாதிகள் கொடுக்க வேண்டியது தார்மீகப் பொறுப்பாகும்.

குறிப்பாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவராக உள்ளார். அதற்கான கடிதங்களை ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ளார். மேலும் இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ் அமைச்சர்கள், இராசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தியேயாக வேண்டும். கிழக்கிருப்புவாதிகள் என்று மார்தட்டுவோர் திருகோணமலையும் கிழக்கு மாகாணத்திற்குரியது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

**சம்பந்தரால் பாடல் பெற்ற தலத்தின் காணியை சம்பந்தன் ஐயாவின் காலத்தில் அபகரிக்க முயல்வது வேதனை**

கிழக்கின் இராசாங்க அமைச்சர்கள் தமது ஊருக்குள் தொகுதிகளுக்குள் மாத்திரந்தான் கிழக்கு மாகாணம் இருக்கின்றது என்று தமது பாரிய பொறுப்புகளைச் சுருக்கக் கூடாது. அவர்கள் சார்ந்த இந்த அரசாங்கம் அமைச்சுகளைத் தமக்குத் தந்ததால் நன்றியணர்வோடு கைகளை உயர்த்தித் தலைகளை ஆட்டும் பொம்மையர்களாக இருக்கக்கூடாது.

“எம் கடன் தலையாட்டிக் கையுயர்த்திச் சலுகைகளை அனுபவிப்பது மட்டுமே” என்ற தாரக மந்திரத்தோடு இவர்கள் செயற்படக்கூடாது. இதனை மக்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. “பேச்சுப் பல்லக்கில் தம்பி கால்நடையில்” என்பதாக செய்கைகள் இப்படியே இருக்கக் கூடாது. பேரின அடிப்படைவாத அதிகாரவர்க்க ஆட்சிக் காலங்களில் தமிழின அழிப்புகள், உடைமை அழிப்புகள், தாயக நிலப்பறிப்புகள், கலாசார அடையாள அழிப்புகள், வரலாற்றுத்தடய அழிப்புகள், நினைவுத்தூபி அழிப்புகள், உணர்வு அடக்குமுறைகள் போன்றவையே நடைபெறகின்றன.

இனச் சுத்திகரிப்புக்கு 1958, 1977, 1983, 2009 போன்ற பல காலங்களில் நடைபெற்ற கொடூர இன அழிப்புகள் எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

**தமிழினத்தை ஒடுக்க நினைக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்க அதிகார வர்க்கம்**

இவ்வன்முறைகளால் அழிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை உள்நாட்டுப் பொறிமுறைகளால் நீதி வழங்கப்படவில்லை. ஆனால் தம்மிடம் உள்நாட்டுப்பொறிமுறை இருப்பதாக 2009 இல் இருந்து இன்றைய வெளிநாட்டமைச்சர் அலிசப்ரி வரை ஐக்கிய நாடுகள் சபையினை ஏமாற்றி வருகின்றனர். தமிழர்களை ஏமாற்றி முஸ்லிங்களை ஏமாற்றி சிங்களவர்களை ஏமாற்றி சர்வதேச சமூகத்தையே ஏமாற்றக்கூடிய நிலைக்கு ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் வளர்ந்துள்ளார்கள். சர்வதேச ஐக்கியநாடுகள் சபையும் ஏமாந்து விடக்கூடாது என்பதே தமிழர்களின் ஏகோபித்த கோரிக்கையாகும்.

தாய்மண்ணில் தமிழர்களின் குடித்தொகையைக் குறைப்பதற்கு அச்சுறுத்தல் அழிப்பு உத்திகளைக் கையாளும் சிங்கள அதிகார வர்க்கமானது அதன் மூலமாக தமிழர்களை அகதிகளாக்கி ஏறத்தாழ 13 இலட்சம் தமிழர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்துள்ளது. இறுதி யுத்தத்தின் பின்னரும் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கு ஆளும் கட்சியில் இருந்த சக்தி வாய்ந்த இளவல் பின்னணியாக இருந்ததாகக் கூறப்படுகிறது, இவருக்கு முகவர்களாக தமிழ்ப் பினாமிகள் இருந்துள்ளார்கள். இதனால் அதிகார இளவல் கறுப்புமணம் உழைத்ததோடு மட்டுமல்லாமல், தாய்மண்ணில் தமிழர்களின் எண்ணிக்கையினையும் குறைத்துள்ளதாக நம்பப்படுகிறது. அதாவது குறுக்கு வழியில் அரசியல் பொருளாதார நன்மைகள் அதிகார வர்க்கத்திற்கும் அதிகார இளவலுக்கும் கிடைத்துள்ளன. குறித்த தமிழ்ப்பினாமிகள் பின்னர் ஆளும் கட்சி வேட்பாளர்களாகவும் தேர்தலில் குதித்திருந்தனர்.

தமிழர்களின் இருப்பை இழக்கச் செய்வதில் இன்னுமோர் அதிகார உத்தி தமிழர் தாயக நிலங்களை சட்ட ரீதியாகவும் சட்ட விரோதமாகவும் அபகரிப்பதாகும். இதற்கான சட்டரீதியான உத்திகளாக இருப்பது அபிவிருத்தி, விவசாயக் குடியேற்றம், பாதுகாப்பு, உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி போன்ற தந்திரோபாயங்களாகும். அதற்குரிய நுட்ப நடைமுறைகளாக மகாவலி அபிவிருத்தி, வனவளப் பாதுகாப்பு, வனசீவராசிகள் பாதுகாப்பு, கரையோரப் பாதுகாப்பு, தொல்லியல் பாதுகாப்பு, அரச காணிகள், காணிச் சீர்திருத்தம், எல்லை மீள்நிருணயம், கடலோரம் இல்லாத மாவட்டங்களுகளைக் கடற்கரைகளோடு இணைத்தல் போன்றவை அமைகின்றன.

இவற்றை விட சட்ட விரோதமான முறையிலும் குண்டர்களின் அச்சறுத்தல் இனவழிப்புகள் மூலமாக தமிழர்களின் உறுதிக்காணிகள் ஒப்பக்காணிகள் பறிக்கப்படுகின்றன. இதற்கு தமிழர்கள் மீதான சிங்கள அதிகார தரப்பினரதும் கையாட்களினதும் வன்செயல்கள் உதவுகின்றன. தென்னிலங்கையிலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைக் கிராமங்களின் மக்களும் அழிப்புகள் அச்சுறுத்தல்களால் அகற்றப்பட்டுள்ளனர். கல்லோயா, அல்லை கந்தளாய், சேருவில, வெலி ஓயா, பதவியா, சிறிபுர, லங்காபட்டுன போன்ற பெயர்கள் சிங்களப் பேரினவாத அபகரிப்புகளின் சான்றுகளாகும்.

இரண்டரை ஆண்டுகள் கால ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் மயிலத்தமடு, மாதவண, கெவுளியாமடு, வடமுனை நெளுக்கல்மலை, வாகரை காரக்காடு போன்ற இடங்கள் ஆக்கிரமிப்பை எதிர்கொண்டுள்ளன.

கரடியனாறு குசலானமலை முருகன் கோவில், வேலோடுமலை, தாந்தாமலை, கன்னியா, திருக்கோணேஸ்வரர் ஆலயக்காணி, முல்லைத்தீவில் வெடுக்குநாறிமலை ஆலயம், குருந்தூர்மலை ஆலயம் போன்றவை சிங்கள பௌத்த தொல்லியல் ஆக்கிரமிப்புப்புக்குள் அல்லது பார்வைக்குள் உட்பட்டுள்ளன. இவற்றை விடவும் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் முப்படைகளுக்கும் வேண்டிய காணிகள் என்ற அடிப்படையில் பல நூற்றுக்கணகான ஏக்கர் காணிகள் ஆக்கிரமிக்கபடுகின்றன.

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் சீழ் இயங்கும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையானது இனவிகிதாசார அடிப்படையில் காணிகளைப் பகிர்வதாகக் குறிப்பிட்டாலும் இதுவரை வழங்கப்பட்ட காணிகளில் 74 சதவீதமான சிங்களவர்களுக்கு 96 சதவீதத்திலும் அதிகமான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 19 சதவீதத்திலும் அதிகமாகவுள்ள தமிழர்களுக்கு 1. 3 சதவீதமான காணிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. 7 சதவீதமாகவுள்ள முஸ்லிங்களுக்கு 2. 7 சதவீதமான காணிகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. இப்படியான பாரபட்சம் ஒரு புறமிருக்க, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இனி வழங்கவுள்ள காணிகளில் இனவிகிதாசாரம் பின்பற்றப்பட்டால் 74 சதவீதமான சிங்களவர்களையே அதிகம் குடியேற்ற வாய்ப்புள்ளது.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...



# பாண்டவர் தேவிக்கு பாண்டிருப்பில் பெருவிழா!

கல்முனை மாநகர் பாண்டிருப்பில் அமைந்துள்ள இலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த 20.09.2022 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழா நடைபெற்று 07. 10. 2022 வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவம் சனிக்கிழமை 08 ஆம் திகதி பாற்பள்ளையத்துடன் உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

மகாபாரத கதையினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று நிகழ்வை வெளிப்படுத்தும் வகையில் சடங்குகள் நடைபெறும். இவ்வாலயம் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது திரௌபதை அம்மன் ஆலயமாகும்.

பஞ்ச பாண்டவர்களுக்காக இவ்வாலயம் அமையப் பெற்றதால் இக்கிராமத்திற்கும் பாண்டவர் இருப்பிடமாக ‘பாண்டிருப்பு’ எனும் நாமமும் பெற்றுள்ளது. இவ்வாறு மிகவும் பழைமையான இவ்வாலயத்தின் நீண்ட வரலாற்றில் இருந்து சில விடயங்களை சுருக்கமாக பார்ப்போம்.

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமானது தாதன் எனும் மாமுனியால் கலிபிறந்து 4640 ஆம் வருடத்தில் எதிர்மன்ன சிங்க மன்னனின் காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதற்கான ஆதாரம் தாதன் கல்வெட்டில் உள்ளது. பின்நாட்களில் இவ்வாலயத்தில் விமலதர்ம சூரியன் மன்னன் 1594 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஆலயத்தை தரிசித்து தான தருமங்கள் வழங்கியதற்கான சான்றுகளும் இம்மன்னனின் ஆட்சிக்கால பதிவுளில் இருந்தும் அறியமுடிகிறது.

பதினெட்டு நாட்கள் நடைபெறும் உற்சவ கால திருவிழாக்கள் மகாபாரத சம்பவங்களை வெளிப்படுத்தும் வகையில் நடைபெறுகின்றமை இவ்வாலயத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

முதல்நாள் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பூசைக்குரிய பொருட்களையும் வழிபாட்டுக்குரிய சிலைகளையும் எடுத்து ஊரின் வடபகுதியை சுற்றி கடலுக்குச்சென்று கடல்குளித்துக் கொண்டு ஆலயத்திற்கு வந்து பூசைகள் நடைபெற்று கொடியேற்றப்படும் (நடு இரவு கடந்துவிடும்).

இரண்டாம் நாள் புதன் கிழமை அதிகாலை கொடியேற்ற திருவிழா பூசையாக நடைபெறும். பின்னர் மகாபாரதம் படிக்கும் ஏடு தொடங்கும் நிகழ்வு நடைபெற்று தொடர்ந்து மகாபாரதம் பாடி பயன் சொல்லுதல் திருவிழா இறுதி நாள்வரை தொடரும்.

ஏழாம் நாளை திங்கட்கிழமை இரவு கிருஷ்ண பகவான் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வருதல் பாரத்தில் பஞ்ச பாண்டவர்களுக்கு துணையாக கிருஷ்ண பகவான் இணையும் சம்பவத்தை பிரதிபலிக்கும் நிகழ்வாக இது அமையும் (சுவாமி எழுந்தருளல்) எட்டாம் நாள் இரவு சுவாமி எழுந்தருளல் திருவிழா பூசை.

12 ஆம் நாள் சனிக்கிழமை இரவு கலியாணக்கால் வெட்டிவருதல் இடம்பெறும் பதின்மூன்றாம் நாள் இரவு கல்யாணக்கால் திருவிழா.

பதினைந்தாம் நாள் செவ்வாய் சோடனை பூசை பதினாறாம் நாள் புதன் கிழமை வனவாசம் செல்லும் நிகழ்வு.

பதினேழாம் நாள் வியாழன் நள்ளிரவு அருச்சுனர் தவநிலை நிகழ்வு பதினெட்டாம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை தீக்குழி மூட்டல் இடம்பெற்று மாலை தீப்பாய்தல் இடம்பெறும்.

மறு நாள் சனி பொதுமக்கள் பொங்கல் வைத்தலும் தீக்குழிக்கு பால்வார்த்தல் பாற்பள்ளயம் இடம்பெற்று மாலை சுவாமி மீண்டும் மாணிக்க பிள்ளையார் ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்து செல்லல் இடம்பெறும்.

18 நாட்கள் திருவிழக்கள் சிறப்பாக நடைபெறுவதுடன் பூசைகள் குடிகளுக்கும் சமூகங்களுக்கும் பகிரப்பட்ட முறையில் நடைபெற்று ஆலய உற்சவ காலத்தில் இப்பிரதேசமே கோலாகலமாக காட்சியளிப்பதுடன் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வருகை தருகின்றனர்.

17ஆம் பக்க தொடர்ச்சி...

## திருக்கோணேஸ்வரர் ஆலய

மொத்தத்தில் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் நாட்டைப்பொறுப்பேற்ற சிங்களத் தலைமைகள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளைவிட அழிவைத் தரக்கூடிய செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுள்ளனர். அதாவது இனவாதம் என்னும் குருட்டு விழிகளோடு மதவாதம் என்னும் இருட்டுப் பாதைகளில் நாட்டையும் சிங்கள மக்களையும் வழி நடாத்திச் சென்றுள்ளனர்.

இதனால் யுத்தம், இனவழிப்பு, கலாசார அழிப்பு, நிலப்பறிப்பு, வரலாற்றழிப்பு கூடவே பொருளாதார அழிப்பு மூலமாக தமிழ் சிங்கள மக்களை எதிரும் புதிருமாக வடக்கு தெற்கு துருவ மக்களாக மாற்றி இரு தேசத்தவர்களாகச் சிந்திக்க செயற்பட சிங்களத்தலைவர்கள் செய்துள்ளனர். சுதந்திரத்தின் பின்னர் தமிழ்மக்கள் உரிமையென்னும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கவில்லை. மாறாக அவசரகாலச்சட்டம், பயங்கரவாத தடைச்சடம், இனவாத மதவாத மொழிவாத சட்டங்கள் அரசியல் யாப்பபுகளின் கீழ் யுத்த கந்தகக்காற்றுகள், அழிப்பு ஒழிப்பு என்னும் அனல் காற்றுகளையே சுவாசித்து வருகின்றனர்.

உரிமை சுதந்திரம் சமத்துவம் நீதி நியாயம் என்ற சுதந்திர தென்றல் காற்றுகளை இதுவரை தமிழர்கள் சுவாசிக்கவில்லை. இப்போது இனவாதத்தின் நீண்டகால விளைவால் ஏற்பட்ட யுத்தக்குற்றம் பொருளாதாரக்குற்றம் என்னும் பாவமூட்டைகளை அரசு சுமக்கவேண்டியுள்ளது. பொருளாதாரக்குற்றத்தால் ஏற்பட்ட விலையேற்றங்கள் பொருட்தட்டுப்பாடுகள் என்கின்ற தேவையற்ற கடினமான சுமையை அன்றாடம் இலங்கை மக்கள் அதிகமானவர்கள் சுமக்கின்றனர். ஆனால் ஆட்சியாளர்களுக்கு இந்த சுமைகள் அழுத்துவதில்லை. ஏனென்றால் அவர்கள் பொருளாதாரத்தில் செழிப்பானவர்கள்.

ஊழல் மோசடி கையூட்டுகள், தரகுப்பணம் என்பன பெரும்பாலான அவர்களது செழிப்புகளுக்கு அடிப்படைகளாக உள்ளன. இப்படியான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தமை மக்களின் குற்றமேயாகும். தேர்தலில் ஒருநாள் மதுமயக்கம் மதிமயக்கத்தால் ஏற்பட்ட தெரிவுகள் ஐந்தாண்டுகள் தண்டனைகளாகத் தொடர்கின்றன.

## கிழக்கிலுள்ள இராஜாங்க அமைச்சர்களும் தமிழ் எம்பிக்களும் என்னதான் செய்கிறார்கள் ?

74 ஆண்டுகள் அனுபவித்த தண்டனைகள் மக்களுக்குப்போதும். அவர்கள் ஏமாற்றப் பிறந்தவர்கள் என்றால், நாங்கள் ஏமாறத்தானோ பிறந்தோம் இத்திருநாட்டில். இதனால்தான் திருநாட்டைத் தெருவோடு சுமக்க வைத்துள்ளார்கள் நம்நாட்டின் தலைவர்கள்.



வாசித்தல் தேடலின்பால் நுகர்த்த எடுக்கும் முயற்சிகளிலிருந்து மாணவர்கள் விலகிச் செல்கின்றார்கள்.

# வாசித்தலில் இருந்து மாணவர்கள் விலகியே செல்லும் அவலம்

## வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா






ச. சக்திவேல்



வாசித்தல் தேடலின்பால் நகர்த்த முயற்சிக்கும்போது எங்கள் பிள்ளைகள் எங்கள் கைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிக் கொண்டே போகின்றார்கள். இது வேதனையாகவும் கவலையளிப்பதாகவும் உள்ளது என தனது ஆதங்கத்தை வெளியிடுகிறார் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார்.

மாணவர்களை முன்னேற்றுவதற்கு, கல்வி அதிகாரிகளான நாங்களும் ஊக்குவிக்கின்றோம் அதிபர்களும் வழிகாட்டுகின்றார்கள் ஆசிரியர்களும் பாடுபடுகின்றார்கள் ஆனால், முடியாமல் தான் இருக்கின்றது என்றும் அவர் கூறுகின்றார்.




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏறாவூரைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர், மதுபாரதி எனும் புனைப் பெயர் கொண்ட பரமேஸ்வரி எழுதிய **"பொய்யெல்லாம் மெய்யென்று"** நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஏறாவூர் மாஞ்சோலை மணி மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே. சித்திரவேல், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, மட்டக்களப்பு ஆசிரியர் மத்திய நிலைய விரிவுரையாளர் சுதாகினி, ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபரும் எழுத்தாளரும் கவிஞருமான சுதாகரி, எழுத்தாளர் பரமேஸ்வரியின் மகளும் ஊடக நிறுவனத்தில் பணிபுரிபவருமான பாரதி இன்னும் கல்வித் துறை சார்ந்த பல அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட எழுத்துத்துறை சார்ந்த ஆர்வலர்களும் நலன் விரும்பிகளும் பிரசன்னமாகியிருந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் சுஜாதாவின் ஆதங்கம் வெளிப்பட்டது.

வலயக் கல்விப் சுஜாதா கொண்டிருக்கும் கவலை எதிர்காலத் தலைவர்களான இன்றைய இளையோரின் எதிர்கால நிலைமைகளை புடம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருப்பதோடு அதுவொரு எச்சரிக்கை மணியாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

இன, மத, மொழி பேதங்களுக்கப்பால் இளையோர் சமுதாயத்தின் பெரும்பாலானோர் இந்த விடயத்தில் ஏதோவொரு மாயையில் அள்ளுண்டு செல்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

அங்கு தொடர்ந்து தனது அவதானிப்பு அனுபவக் கருத்துக்களை முன்வைத்த கல்விப் பணிப்பாளர் சுஜாதா, தற்காலத்தில் பள்ளிப் பிள்ளைகளை நாங்கள் எழுத, வாசிக்கத் தூண்டுவது என்பது சிரமமாக இருக்கின்றது.

எங்கள் பிள்ளைகள், எந்த அளவுக்கு இந்த தகவல் தொழினுட்ப யுகத்திலிருந்து அல்லது தொழினுட்பப் பொருட்களிலிருந்து ஆக்கபூர்வமாகக் கற்றுக் கொள்கின்றார்கள் என்பதும் புரியாமலுள்ளது. அல்லது அவர்களிடம் இருப்பது கூட இல்லாமல் போய் விடுகின்றதா என்பதும் தெரியாமல் இருக்கின்றது.

இப்பொழுதெல்லாம், நாங்கள் வழங்கிய பாடப் புத்தகங்களை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளும்போது அவற்றை கசங்காமல், மடியாமல், உருக்குலையாமல் புத்தம் புதிதாகவே திரும்ப எங்களிடம் ஒப்படைக்கின்றார்கள்.

இது எதைக்காட்டுகின்றது என்றால், புத்தகங்கள் விரித்துப் பார்க்கப்படவில்லை என்பது தெரிகிறது. வாசிப்புப் பழக்கம் என்பது கிட்டத்தட்ட இல்லை என்ற நிலையிலேயே மாணவர்கள் உள்ளார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கும் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் கைவசம் இருக்கின்ற பாட நூல்கள், அவை சிறந்த அறிவுப் பொக்கிஷங்கள்.

இலவசமாக விநியோகிக்கபப்டும் பாடப் புத்தகங்களில் ஒரு காலத்தில் அதன் விலைகள் எவ்வளவு என்று அச்சிடப்பட்டது. இது மாணவர்களும் பெற்றோரும் குறைந்தபட்சம் இந்தப் புத்தகங்களின் விலைப் பெறுமதியையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதால்தான் இவ்வாறு செய்யப்பட்டது.

இப்பொழுதெல்லாம் மாணவர்களுக்கு பாடநூலில் உள்ள அனைத்து விடயங்களையும் தொகுத்துக் கொடுப்பதற்கு ஒரு ஆசிரியர் அல்லது ஒரு வழிகாட்டி அல்லது யாரோ ஒரு உதவியாளர் தேவைப்படுகின்றார்.

ஏனென்றால், சுயமாக வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் தற்போதைய மாணவ சமூகத்தினர் உள்ளார்கள்.

இப்படிப்பட்டதொரு சூழ்நிலைக்குள் பிள்ளைகள் வழிப்படுத்தப்பட்டார்களா? அல்லது தாங்களாகவே இத்தகைய ஒரு பொறிக்குள் விழுந்து விட்டார்களா? என்பதில் கேள்விகள் உள்ளன. இது மன வேதனையாக இருக்கின்றது.

நான் கணிதத்துறை சார்ந்த ஒருவராக இருப்பதால் எனது அனுபவ அறிவைக் கொண்டு சொல்வேன் உண்மையில் கணிதப் பாடத்திற்கே ஒரு வழிகாட்டி ஆசிரியர் தேவை இல்லை.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு அவ்வளவு மிகவும் எளிதாக, எளிய உதாரணங்களுடன் கணிதப் புத்தகங்களில் பாடங்கள் செய்து காட்டப்பட்டிருக்கின்றன.

இப்பொழுதெல்லாம் மாணவர்களுக்காக பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவற்றை எவ்வாறோ குறிப்பிட்ட நேர அட்டவணைக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கமே தவிர அவற்றின் தரம் பார்க்கப்படுவதில்லை. தரங்குறைந்த நிகழ்ச்சிகளை நடத்தி முடித்து விட்டு கடமை முடிந்ததாக அமர்ந்து விடும் சூழ்நிலை இருக்கிறது.

**கல்விதான் வாழும் தகுதியை நமக்குத் தருகிறது**

இவ்வாறு நிகழ்ச்சிகளைக் குறைத்து தரமற்ற நிகழ்ச்சிகளை நடத்தி முடிக்கும் போது எங்கள் பிள்ளைகளின் எழுத்தாற்றல் கலையார்வம் எல்லாமே மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

இன்னொரு புறம் எங்கள் மாணவர்களின் பாடசாலை நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாட்கள் மிகவும் குறைவடைகின்றன. மாணவர்கள் பாடசாலைச் சூழலுக்கு வெளியே வேறு வேறு சிந்தனைகளில் மூழ்கி ஏதேதோ தேவைகளை நாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...









# காலச் சுழற்சியில் சிக்கிய காய்நகர்த்தல்

# இம்ரானின் அரசியல் அரியணை ஏறலாம்?

நிப்ராஸ்

செல்வாக்குமிக்க அரசியல் தலைவர்களை சூழ்நிலைக் கைதியாக்கும் அரசியல் காய் நகர்த்தல்கள், காலச் சுழற்சியில் ஒவ்வொரு வரையும் சிக்க வைப்பதுண்டு. ஆசிய நாடு களில், பாகிஸ்தானில்தான் இந்தச் சிக்கல்கள் அதிகம். இதுபோன்ற சிக்கலுக்குள் மாட்டிய பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் அதிலிருந்து மீண்டுள்ளார். இந்த மீட்சி அவரை மீண்டும் அரியணை ஏற்றலாம்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது அரச தரப்பு சுமத்திய குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. எந்தவொரு பயங்கரவாத நோக்குகளிலும் இம்ரான் கானின் உரை உள்ளடங்கவில்லை என கடந்த திங்கட்கிழமை (19) நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான்கான், ஓகஸ்ட் 20 இல் நடந்த கூட்டத் தில் பொலிஸார், அரச அதிகாரிகள் மற்றும் சட்டத்துறை சார்ந்தோரை கடுமையாக விமர்சித்து உரையாற்றினார்.

அவர், பதவி கவிழ்க்கப்படுவதற்கு மறை முக உதவியாகச் செயற்பட்ட அதிகாரிகளை குறிவைத்தே அந்த உரையிருந்தது.

இந்த உரை, வன்முறையைத் தூண்டி பயங் கரவாதத்தை ஊக்குவிப்பதாக அரசாங்க தரப்பு குற்றம் சுமத்தி இம்ரானுக்கு எதிராக வழக்குத்தொடுத்தது.

நாடு முழுவதும் தனக்கு ஆதரவுகள் அதிக ரித்து வரும் நிலையில், நாடளாவிய ரீதியில் கூட்டங்களை நடாத்தி வரும் இம்ரான்கான் பொதுத் தேர்தலை நடாத்துமாறு அரசாங் கத்தை வலியுறுத்தி வருகிறார். இவரது முயற்சிகளை தடுக்கும் நோக்குடனே, பிரதமர் ஷெபாப்ஷெரீப் தலைமையிலான அரசாங்கம் இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாக இம்ரான்கான் கூறுகிறார்.

இந்நிலையில், நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு இம்ரானின் அரசியல் செயற்பாடுகளுக்கு உற்சாகமளிக்குமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்து சமுத்திர அரசியலில் சீனா, இந்தியாவுக்கு அடுத்து பாகிஸ்தானின் வகிபாகமும் தவிர்க்க முடியாதது. பொருளா தார மற்றும் இராணுவ ரீதியாக மேற்சொன்ன நாடுகளுடன் மோதுவதிலும் பார்க்க, மறை முக நெருக்குதல் யுக்திகளை கையாண்டு தான் பாகிஸ்தான் முன்னேற முயல்கிறது. இதுதான், பலரது பார்வையும். வெளிநாடு களின் இந்தப் பார்வைகளுக்கு பலமூட்டும் வகையில்தான், இம்ரானுக்கு எதிரான வழக் கும் சோடிக்கப்பட்டிருந்தது.

அல்கைதா, தலிபான் மற்றும் லக்ஷர் இதொய்பா போன்ற அமைப்புக்களின் செயற் பாடுகளுக்கு தூபமிடும் கருத்துக்களை வெளியிட்டார் என்பதுதான் குற்றம். எனினும் வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாத அரசாங்கமே பாகிஸ்தானில் அமைய வேண்டும் என்ற பொருள்தான் இம்ரானின் உரையிருந்தது. எவ்வாறாயினும் அந்நிய சக்திகளுக்கு அடிபணியும் அரசை இப்பிராந்தியத்திலுள்ள தலிபான்கள், அல்கைதா உள்ளிட்ட எந்த அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளாது.



அவ்வாறு அமைந்தாலும், அந்த அரசாங் கத்தை அச்சுறுத்தும் வகையிலான வன்முறை களில் இந்த அமைப்புக்கள் ஈடுபடும். இதனால்தான், இந்த அமைப்புக்கள் அடிப் படைவாத இயக்கங்களாக முத்திரை குத்தப் பட்டுள்ளன.

இவ்வாறு நிகழ்வது பாகிஸ்தானின் உள் நாட்டு யுத்தத்தை ஏற்படுத்துமென பாகிஸ்தான் மக்கள் அஞ்சுவதுண்டு. எனவே, பாகிஸ்தானி யரை உளரீதியாக அச்சுறுத்தி ஆதரவு தேடும் அரசியல் யுக்தியை இம்ரான்கான் கையாண் டிருக்கலாம். அதற்காக, இது பயங்கரவாதத்தை தூண்டியதாக பொருள்கொள்ள முடியாது. நீதிமன்றமும் இவ்வாறுதான் கருதியிருக்கும்.

இருப்பினும், தேவையேற்படும்போது இந்த அமைப்புக்களை பாகிஸ்தான் பயன்படுத்து வதாகவே மேற்குலகம் கருதுகிறது. அயல்நாடு களின் நிலைப்பாடுகளும் இதுதான். இவற்றை நிரூபிக்கும் வகையில் சில செயற்பாடுகள் அங்கு நடந்துமிருக்கின்றன.

இதனால், சர்வதேச அரங்கிலிருந்து தனிமைப் படும் ஆபத்துக்களை பல தடவைகள் எதிர் கொண்டது பாகிஸ்தான். முன்னாள் ஜனாதிபதி முஷர்ரஃப்தான் இந்த ஆபத்திலி ருந்து பாகிஸ்தானை காப்பாற்றிய முக்கிய அரசியல்வாதி. அல்கைதா தலைவர் ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டதும் பாகிஸ்தா னில்தானே பத்து வருடங்கள் அங்குள்ள அப்போட்டாபாத் என்ற ஊரில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர் ஒஸாமா. இக்காலத் தில் பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்தவர் முஷர்ரஃப்.

ஆனாலும் அப்போதய பாகிஸ்தான் இராணு வத் தளபதி அஷ்பக்கயானி அல்கைதா தலைவ ருடன் இரகசிய உறவில் இருந்ததாக பேசப்பட் டதும் உண்டு. இருந்தாலும், இவரையும் மீறித்தான் அமெரிக்க உளவு விமானங்கள் பின்லேடனை குறிவைத்தன. இதற்கு முஷர்ரஃப் மறைமுக உதவியாகச் செயற் பட்டிருந்தார்.

தனது இராணுவத் தளபதியை நேரடியாகப் பகைப்பதிலுள்ள ஆபத்துக்களை உணர்ந்த முஷர்ரஃப் இதைக் கச்சிதமாக செய்துள்ளார். இராணுவ தளபதிகளை பகைப்பதிலுள்ள ஆபத்துக்களை பல தடவைகள் நிரூபித்துள்ள நாடும் பாகிஸ்தான்தான். பல பிரதமர்கள் பதவியிறக்கப்பட்டதும் இராணுவ தளபதி களால்தான். இம்ரானின் பதவி கவிழ்ப்பிலும் ஏதாவதொரு இராணுவ தலையீடு இருந்தி ருக்கலாம். இதைச்சாடியே இம்ரான் உரை யாற்றினார். இந்த உரைகளுக்கு வரவேற்பு இருந்ததால்தான், பஞ்ஞாப் மாநில தேர்தலில் இம்ரானின் கட்சி அதிக ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. இந்த வெற்றிக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் நீதிமன்றத் தீர்ப்பு உள்ளமை கவனிக்கத்தக்கது.

# துருக்கி, சவூதியின் ஏற்பாட்டில் ரஷ்ய, உக்ரைன் கைதிகள் விடுதலை




ரஷ்யா, உக்ரைனுக்கிடையில் பரஸ்பர கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. துருக்கி மற்றும் சவூதி அரேபியாவின் மத்தியஸ்தத்துடன் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

முன்னூறு கைதிகளை ரஷ்யாவும் பதிலாக 85 கைதிகளை உக்ரைனும் விடுதலை செய்துள்ளன. ரஷ்யா விடுதலை செய்த கைதிகளில் உக் ரைனுக்காக உளவுப்பணியாற்றிய வெளிநாட்டவர்களும் உள்ளனர்.

அமெரிக்கா, பிரித்தானியா சுவீடன் மற்றும் மொரோக்கோவைச் சேர்ந்த பலரும் இதிலுள்ளனர். மேலும், ரஷ்ய விமானிகள், தளபதிகள், துறைமுகங்களின் கடற்படை அதிகாரிகள் பலரை உக் ரைன் விடுவித்தது.

தேசத் துரோகங்களுக்காக, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டோரும் இதில், விடுதலையாகினர்.

ஏழுமாத போருக்கு மத்தியிலும் கைதிகள் பரிமாற்றப்பட்டமை அமைதிக்கான திருப்புமுனையாக அமையலாம்.

கைதிகள் விடுதலை செய்யப்பட்டதால்,பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்களது நேசத்துக்குரியவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இக்கைதிகளில் மிகப் பிரதானிகள் சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களை சொந்த நாடுகளுக்கு அனுப்பும் பணிகளை சவூதி அரேபியா மேற்கொள்ளவுள்ளது.

# ஐ.நா. கொள்கைகளை சிறிதும் வெட்கமின்றி ரஷ்யா மீறியுள்ளது:

## புடின் மீது ஜோ பைடன் பாய்ச்சல்

நியூயார்க்:

ஐக்கிய நாடுகள் கொள்கைகளை சிறிதும் வெட்கமில்லாமல் ரஷ்யா மீறியுள்ளது என்று அந்நாட்டு அதிபர் புதினை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மத்தியில் அமெரிக்க அதிபர் பைடன் உரை நிகழ்த் தினார். இந்த உரையில் உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்ய அதிபர் புதினை அவர் கடுமையாக விமர்சித்தார். ஜோ பைடன் பேசும்போது, "ஒரு தனிப்பட்ட நபரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற போர் இது. ரஷ்யாவை யாரும் அச்சுறுத்தவில்லை. ரஷ்யாதான் இந்த மோதலை நாடியிருக்கிறது.

ஐக்கியநாடுகள் கொள்கைகளைசிறிதும் வெட்கமில்லாமல் ரஷ்யா மீறியுள்ளது. ஐ.நா.வின் விதிமுறையை மீறி அண்டை நாடான உக்ரைன் மீது படையெடுத்துள்ளது. எல்லா இறையாண்மையும் கொண்ட நாடுகளைபோல உக்ரைனுக்கும் தங்கள் நாட்டை பாது காத்துக் கொள்ள எல்லா உரிமையும் கொண்டுள்ளது. உக்ரைனுடன் நாம் துணை நிற்போம்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் அனைவரும் ஒற்றுமையாக இருப்போம். ரஷ்யா செய்த அட்டூழியங்களை இந்த உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. பள்ளிகள், ரயில் நிலையங்கள், மருத்துவமனைகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத் தியுள்ளது. ஐரோப்பாவின் மீது அணு ஆயுத எச்சரிக்கையை விடுத் திருக்கிறது.

கல்முனை NET
kalmunainet.com உண்மையின் முகம்
வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்


Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Friday, 30. 09. 2022